Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 22 (25.04.2003) வெள்ளிக்கிழமை இதழ் :204

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-754)

# பாதுகாப்பு நடவடிக்கைகளை ரத்துச் செய்ய ரணில் பணிப்பு!

## விண்ணாணம் விநாசியர்



அமைதியின்ரை மௌனத்தைவிட யுத்தத்திட சத்தந்தான் உவவுக்கு ஆர்வம்!

## ஜனாதிபதியின் உத்தரவை பிரதமர் புறக்கணிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி, பாதுகாப்புச்சபையில் விடுத்த உத்தரவையடுத்து கொழும்பில் அமைக்கப்பட்ட புதிய பொலிஸ் தடைகளை உடனடியாக அகற்றும்படி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ்மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

பிரதமரின் இந்த உத்தரவு பற்றிய ஜனாதிபதியின் நிலைப்பாடு தெரியவரவில்லை.

முன்னதாக, நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வீதித்தடைகள் உட்பட 1995 இற்கு முன்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை மீண்டும் உருவாக்குமாறு, முப்படைத் தளபதிகளையும், பொலிஸ் மா அதிபரையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் பணித்திருந்தார்.

விடுதலைப் புலிகள், சமாதான முயற்சிகளிலிருந்து முற்றாக விலகுவதில்லையென்று அறிவித்துள்ள நிலையில், இத்தகைய தேவையற்ற பாதுகாப்பு நிலைமைகள் மக்களை போர் மனநிலைக்கு இட்டுச்செல்வதாகவே அமையுமென, பிரதமர் கருதுவதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - நேற்றும் முப்படைத் தளபதிகளையும் உயர் படை அதிகாரிகளையும் ஜனாதிபதி சந்திரிகா சந்தித்து உரையாடியதாகத் தெரியவருகின்றது.

## ஏ - 9 வீதியை மூடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை

### சிங்கள தினசரியின் செய்திக்கு ஒஸ்ரின் பதில்

யாழ். - கண்டி ஏ-9 வீதியை மீண்டும் மூடுவதற்கான எந்த அவசியமும் இல்லை என்று, பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஏ-9 வீதி மூடப்படுவது தொடர்பாக கொழும்பு சிங்களத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டமை பற்றியே இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

ஏ-9 வீதியைத் திறப்பது என்பது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்

(10 ஆம் பக்கம் பார்க்க)



கடற்புலிகளை அங்கீகரிக்கக்கோரிய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைக் கண்டித்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட பிக்குகள் நேற்று கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## பாதுகாப்பை பலப்படுத்தும் அவசியம் அரசுக்கு இல்லை

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகினாலும், உடனடியாக போர் ஆரம்பிக்கும் அச்சுறுத்தல் காணப்படவில்லையென்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் இன்னமும் இருக்கிறது. அதனை மீறப் போவதில்லை என விடுதலைப் புலிகள் உறுதியளித்துள்ளார்கள் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீண்டும் தெருக்களில் வீதித் தடைகளை ஏற்படுத்திப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் அவசியம் கிடையாது எனவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் 1995 இலும் பேச்சுக்களிலிருந்து விலகியிருந்தார்கள். அதற்கும் தற்போதைய சூழலுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன எனப் பீரிஸ் மேலும் தெரிவித்தார். சமாதான நடைமுறை சார்ந்த பல விடயங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி அனுப்பிய பொலிஸாரை பிரதமர் ரணில் திருப்பியனுப்பினார்!

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குப் பாதுகாப்பு வழங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அனுப்பப்பட்ட 25 பொலிஸாரையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருப்பியனுப்ப உத்தரவிட்டார்.

ஏற்கனவே, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் 52 பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாகவே தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின்போது, மேலும் 25 பொலிஸாரைப் பணியில் ஈடுபடுத்த ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், ஏற்கனவே உள்ள பொலிஸாரே அதிகம் என்ற பிரதமரின் உத்தரவின்பேரில் இந்தப் பொலிஸார் திருப்பி அனுப்பப்பட்டனர்.

## புலிகள் முன்வைத்த விடயங்கள் நியாயமே எனப் பிரதமரும் ஏற்றார்!

### கிளிநொச்சியில் சந்திரசேகரன் தகவல்

தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கின்ற காரணம் நியாயமானது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தான் கூறியபோது அவரும் அதை ஏற்றதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர் நிறுத்தத்துக்குப் பின்பு வெளிநாட்டு உதவிகள் பெருமளவில் இலங்கைக்குக் கிடைக்க ஆரம்பித்துள்ளன. இந்த வெளிநாட்டு உதவிகள் எந்தளவுக்கு வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் புனரமைப்புக்குப் பயன்படுத்தப்படப்போகின்றன என்பதைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு தமிழீழ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அடிப்படை விடயங்களில் தாமதம் மக்களிடம் விசனத்தை ஏற்படுத்தும்

### யாழ். ஆயர் அவசர கடிதம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓர் ஆண்டு கடந்த பின்பும், பல அடிப்படை விடயங்களில் முன்னேற்றம் ஏற்படாதது இருப்பது தமிழ் மக்கள் மனங்களில் விசனத்தையும், குழப்பத்தையும், பேச்சுக்களில் நம்பிக்கையில்லாத் தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. இது இறுதியில் பேச்சுக்களில் ஈடுபடும் இருதரப்பிற்கும் இடையே ஐயப்பாட்டையும் நம்பிக்கையீனத்தையும் தோற்றுவிக்கும் என, யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் - அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எழுதிய அவசர கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் ஆயர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, பேச்சினை புலிகள் தரப்பினர் இடைநிறுத்தியிருப்பது ஓர் அபாய அறிவிப்பாகும்.

அரசின் போக்கில் அதிருப்தியுற்று இதுவரை இணக்கம் கண்டவற்றை அமுலாக்கத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கள் மீண்டும் தொடரும்; அமெரிக்கத் தூதர் நம்பிக்கை!

### கைவிடுவதை ஏற்கமுடியாது என்கிறார்

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தாம் நம்புவதாக, அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

சமாதானப் பேச்சுக்களைக் கைவிடுவது ஏற்கமுடியாத விடயம். இலங்கைக்கு சர்வதேச சமூகம் உதவி செய்யப் பல காரணங்கள் இருக்கின்றன. மீண்டும் இலங்கையில் அமைதி ஏற்படவேண்டும் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி-730)
01-505632, 074-612656, 01-390128

# கடற்பிரதேச மோதல் தொடர்பான மற்றுமோர் சிபார்சு அனுப்பிவைப்பு

## கண்காணிப்புக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

கடல் மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பான இரண்டாவது கட்டச் சிபார்சு அறிக்கையை, போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைக்கவுள்ளது.

முதலாவது கட்டச் சிபார்சு அறிக்கைக்கு அரசும், புலிகளும் அளித்த பதில்களின் அடிப்படையிலேயே, இரண்டாவது கட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச் சிபார்சு அறிக்கைக்கு, இருதரப்பும் சமர்ப்பிக்கும் பதில்களைப் பொறுத்தே இறுதி முடிவுகள எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில் -

இந்த விவகாரம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சனுடன் பேச்சுக்களை நடத்தியிருப்பதாகவும் அறிய முடிகிறது.

# சமத்துவம் பேசும் ஜே.வி.பி. சமஷ்டியை எதிர்ப்பது ஏன்?

## வாசுதேவ நாணயக்கார கேள்வி

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி- இனங்களுக்கிடையிலான சமத்துவம், உரிமைகள் பற்றிப் பேசுகிறது. ஆனால், சமஷ்டித் தீர்வை எதிர்ப்பது ஏன் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வே அனுசரணையோடு ஜனாதிபதியே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்துவைத்தார். ஆனால், நோர்வே மத்தியஸ்தர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமெனக் கூறியவர்கள் ஜே.வி.பியினர். இத்தகைய பின்னணியில் ஜனாதிபதியின் கட்சியும் ஜே.வி.பியும் எவ்வாறு கூட்டணி அமைக்க முடியும் என்றும் நாணயக்காரர் கேள்வியெழுப்பினார்.

இதேவேளை- புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் திறந்த பொருளாதாரத்தின் மீது நம்பிக்கை வைத்து தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண முனைவதாக அங்கு கூறினார்.

## வளர்ப்பு நாய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி, இன்று வழங்கப்பட இருப்பதாக தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி பின்வரும் நிலையங்களில் வைத்து வழங்கப்படவிருக்கின்றது.

தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்தில் காலை 9 மணிக்கும், அண்ணா சனசமூக நிலையத்தில் காலை பத்து மணிக்கும், கலைச்செல்வி சனசமூக நிலையத்தில் காலை 11 மணிக்கும் தடுப்பூசி வழங்கும் பணி இடம்பெறும்.


இதேவேளை - வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் பெறாதவர்கள்- மேற்படி நிலையங்களில் உரிமங்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் தர மாணவருக்கு சத்துணவு திட்டம் அமுலாகும்

'எல்லோருக்கும் கல்வி' என்ற நோக்கத்தை அடைவதற்காக, இரணடாம் தவணை ஆரம்பத்திலிருந்து தரம் ஒன்று மாணவர்களுக்கான சத்துணவுத்திட்டத்தை கல்வியமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன் மூலம், யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட 12 பாடசாலை மாணவர்களுககு - ஒரு மாணவருக்கு நாளொன்றுக்கு 15 ரூபா பெறுமதிப்படி இந்தச் சத்துணவு பாடசாலைகளில் வழங்கப்படும்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினாலும், அதிபர்களாலும் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். (ரா)



தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்காக யாழ்ப்பாணம் வருகைதந்த தமிழகம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் க.ப. அறவாணனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சிவமகாராஜா ஆகியோரைப் படத்தில் காணலாம்.



மறைக்கோட்ட இளையோர் ஆணைக்குழுவினரால், உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு அண்மையில் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. கருத்தரங்கின்போது கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.


தந்தை செல்வநாயகம்

26வது நினைவுநாள் நிகழ்ச்சி

தலைமை : பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ்
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

இடம் : கைலாசபதி கலையரங்கம், யாழ் பல்கலைக்கழகம்

காலம் : 26.04.2003 சனிக்கிழமை பி.ப. 3.00 மணி



நிகழ்ச்சி நிரல்

வரவேற்புரை
தலைமையுரை
நினைவுப் பேருரை

பேராசிரியர் முனைவர் க.ப.அறவாணன் அவர்கள்
முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, இந்தியா.

பொருள் : "காந்திய நெறிகளும் தந்தை செல்வாவின் அரசியல் இலட்சியமும்"

கலை நிகழ்ச்சிகள்:
இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள், யாழ். பல்கலைக்கழகம்.

இசை மாலை.

நாட்டியாஞ்சலி

நன்றியுரை

சிறப்பு விருந்தினராக மதுரை அன்னை திரேசா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்களும் கலந்துகொள்வார்.

அனைவரையும் திரண்டு வந்து தமிழ்த்தேசியத்தின் தந்தைக்கு அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்று காலை 9.00 மணிக்கு தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறும்.

தந்தை செல்வா
நினைவு அறங்காவற்குழு

(சி-870)


# பிரதமரின் செயலர் பிரட்மன் ஞாயிறன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ். வரும் இவர், ஞாயிறு காலை 11 மணியளவில் யாழ். அரச செயலகத்தில் யாழ். அரச அதிபரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது, மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் மக்கள் அனுபவிக்கும் நெருக்கடிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (லி)

# பிரதேச சபைகளின் பிக்கப் வாகனங்கள்; பொலிஸிடம் முறையிட்டும் பலனில்லை!

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பிக்கப் வாகனங்கள் திரும்ப ஒப்படைக்கப்படாமை தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

'றான்' தவிர்ந்த உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏழு பிக்கப் வாகனங்களைத் திருப்பித் தருமாறு கோரியும், இதுவரை அப்பிரதேசசபைகள் வாகனங்களை மீளக் கையளிக்கவில்லை.

நல்லூர், வலி. தெற்கு, வலி. மேற்கு, வலி.தென்மேற்கு, பருத்தித்துறை, ஊர்காவற்துறை, வடமராட்சி தென்மேற்கு ஆகிய பிரதேச சபைகளே தமது பிக்கப் வாகனங்களை மீளக் கையளிக்கவில்லை.

பொலிஸாருக்கு அறிவித்தும் இது தொடர்பாக அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிரதேச சபைத் தலைவர்கள் இதுவரை வாகனங்களைக் கையளிக்காமல் இருப்பது ஒரு குற்றவியல் தண்டனைக்குரிய விடயமாகுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பாக ஆளுநரிடமும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## பணிப்பாளர் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு, யாழ். வலயத்துக்குட்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றினைச் சேர்ந்த அலுவலர்கள், எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை, யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


சிறு விளம்பரம்

பல்கட்டுதல

பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் நல்லமுறையில், நியாயவிலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீன ரக பிறேம்களில் மூக்குக்கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக்கண்ணாடி அகம். இல-05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-805)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
(குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்)
10.30, 2.30, 6.30,9.30
(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
•URASSIC PARK 3
(சி-731)

# தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து!
# சந்திரிகா எதிர்க்கட்சிகளுடன் ஆராய்வு

## இரவிரவாக நடந்தது கூட்டம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகிக் கொண்ட பின்னர், எழுந்துள்ள புதிய அரசியல் சூழ்நிலை குறித்து எதிர்க் கட்சிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா கூடி ஆராய்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஆரம் பமான இந்தக் கூட்டம் நள்ளிரவு வரை நீடித்ததாகத் தெரிய வருகின் றது. இந்தச் சந்திப்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். ஜெயரத்ன, லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, மைத்திரிபால சிறி சேன, அனுரா பண்டாரநாயக்க ஆகி யோரும்,

ஜே.வி.பியைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்களான விமல் வீர வன்ச, ரில்வின் சில்வா ஆகியோரும், ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவா னந்தா, தவராசா மற்றும் புளொட் தலைவர் சித்தார்த்தன், தேசிய ஐக் கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஃபேரியல் அஷ்ரப், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், சேகு இஸ்ஸதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புலிகள் பேச் சிலிருந்து விலகியதால் எழுந்துள்ள நிலைமை குறித்து விரிவாக ஆராயப் பட்டதுடன், அடுத்த கட்டமாக எடுக் கப்படவேண்டிய முன்னேற்பாட்டு நட வடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட் டது.

இந்தச் சூழ்நிலை குறித்து நிலை மையை மதிப்பிட்டு ஜனாதிபதிக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க லக்ஷ் மன் கதிர்காமர் தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டதா கத் தெரியவருகிறது.

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக இளங்கோ

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையா ளராக இலட்சுமணன் இளங்கோ கடந்த திங்கட்கிழமை முதல் பொறுப்பேற்றுள்ளார்.

## நல்லூர் பிரதேச செயலாளராக முருகையா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலாளராக வேலுப்பிள்ளை முருகையா நிய மிக்கப்பட்டுள்ளார்.

இவர் நுவரேலியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும், அடம்பன், பளை ஆகியவற்றின் பிர தேச செயலாளராகவும், ஆள் அடையாள அட்டைத் திணைக் களத்தில் உதவி ஆணையாள ராகவும் முன்னர் கடமைபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேச்சுக்கள் நிறுத்தப்பட்டது; இந்திய அதிகாரிகள் ஆராய்வு!

### வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையில் அரசாங்கத்திற் கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறும் எனத் தாம் நம்புவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவ்தேஜ் சர்னா தெரிவித்தார்.

இப்போது ஏற்பட்டுள்ளது ஒரு குழப்பமான நிலைதான். சமாதானப் பேச்சுக்கள் இதுவரை சரியான பாதையில்தான் சென்று கொண் டிருந்தன. திடீரெனத் தோன்றியுள்ள இந்த நெருக்கடிகள் நீங்கும் என இந்தியா நம்புகிறது. பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டமை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் அதி காரிகள் கூடி ஆராய்ந்துள்ளதாக வும் நவ்தேஜ் சர்னா மேலும் குறிப் பிட்டார்.

## 'சார்ஸ்' தொற்றுநோய் தடுப்புக்கு அமைச்சர் மட்டக்குழு நியமனம்!

(கொழும்பு)

உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவிவரும் 'சார்ஸ்' நோய் இலங்கை யில் பரவாமல் தடுப்பது பற்றி நடவ டிக்கைகளை மேற்கொள்ள அமைச் சர்கள் மட்டக் குழுவொன்று நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தக்குழு அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப் பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, வெளிவிவகார அமைச் சர் ரிரோன் பெர்ணானடோ ஆகி யோரை உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரி யவருகிறது.

அமைச்சரவைக் கூட்டத்தில் சார்ஸ் நோய் தொடர்பாகவும், இதிலி ருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர் பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாக வும் தெரியவருகிறது.

விமானப் பயணிகளைச் சோத னையிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவ டிக்கை - வெளிநாட்டுப் பயணிகள் மூலம் நாட்டிற்குள் 'சார்ஸ்' நோய் பரவுவதைத் தடுப்பதற்கே என்றும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட் டப்பட்டது.

இதேவேளை, 'சார்ஸ்' நோய் பரவி யுள்ள நாடுகளிலிருந்து இலங் கைக்கு வரும் பயணிகளின் விசாவை இடைநிறுத்துமாறும், மேற்படி நாடு களிலுள்ள இலங்கைத் தூதுரகங் கள் விசா வழங்குவதை நிறுத்த நட வடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அமைச்சர் காமினி லொக்குகே இந் தக் கூட்டத்தில் ஆலோசனை வழங் கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் 'சார்ஸ்' நோய் ஆபத்திலிருந்து தற்காத்துக் கொள் வது பற்றிய அவசர கலந்துரையா டல் ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பில் இடம்பெற்றது. சுகாதார அமைச்சர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற் றது.

இந்தக் கலந்துரையாடலில், சுகாதார அமைச்சின் செயலாளர் றெஜினோல்ட் பெரேரா, மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பா ளர்கள், போதனா வைத்தியசாலை களின் பணிப்பாளர்கள் மற்றும் சுகா தாரத் திணைக்கள உயரதிகாரி களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன கருத்து தெரிவிக்கையில் -

இதுவரை இலங்கையில் 10 பேருக்குச் 'சார்ஸ்' நோய் ஏற்பட்டிருக் கலாம் என்ற சந்தேகத்தில் பரிசோத னைகள் இடம்பெற்றதாகவும், ஆனால் எவருக்கும் இந்த நோய் ஏற்பட்டது உறுதிசெய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதுவரை உலகிலுள்ள 25 நாடு களில் பரவியுள்ள 'சார்ஸ்' நோயி னால், 4000 பேர் பாதிக்கப்பட்டி ருப்பதாகவும், அவர்களில் 224 பேர் மரணமாகியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

ஹொங்கொங்கில் மட்டும் 1400 பேர் இந்த நோயினால் பாதிக்கப் பட்டதுடன், 94 பேர் மரணமடைந் தது குறிப்பிடத்தக்கது.

## புரிந்துணர்வு உடன்பாட்டினாலேயே இறைமை பாதுகாக்கப்பட்டுள்ளது!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந் துணர்வு உடன்பாட்டினால் நாட்டின் இறைமை பாதுகாக் கப்பட்டிருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சர வைக் கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களிலிருந்து புலிகள் இடைவில குவதாக அறிவித்திருப்பது குறித்து இந்த அமைச்சர வைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது. இந்தக் கூட்டத்தில் பேசிய பிரதமர்,

புரிந்துணர்வு உடன்பாட்டினால்தான் நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது. புலிகள் பேச்சுக்களிலிருந்து விலகியபோதும், சண்டை ஏற்படவில்லை எனத் தெரி வித்தார்.

அமைச்சரவைக் கூட் டத்தில் அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது பற்றி விரிவாக ஆராயப் பட்டதாகவும், இதன்போது அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ் மற்றும் மிலிந்த மொற கொட ஆகியோர், நோர்வே யின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் நடத்திய பேச்சுக்கள் குறித் தும் விளக்கிக்கூறினர்.



## விடியோப் படம் எடுத்தோர் கிரானில் படையினரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரானில், விடியோப் படம் பிடித்த இருவரைப் படையினர் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளதாகத் தொியவருகிறது.

ஓட்டோவில் விடியோப் படம் எடுத்துக்கொண்டு சென்றவர்களையே படையினர் கைதுசெய்து பொலிஸாரி டம் ஒப்படைத்தனர்.

இவர்கள் எதற்காகக் கைது செய்யப்பட்டார்கள் என்பதைப் படை யினரோ, பொலிஸாரோ தெரிவிக்க வில்லை. இரு இளைஞர்களையும் பொலிஸார் தடுத்துவைத்து விசா ரித்து வருவதாகவும், இவர்கள் சென்ற ஓட்டோவும் பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்ப தாகவும் தெரியவருகிறது.

## மேதினத்தில் கலந்துகொள்ள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மேதினத்தை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதா னத்தில் நடைபெறவுள்ள மேதின நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு நீர்வேலி கண்ணாடித் தொழிற் சாலை ஊழியர் சங்கத்தினர் - சங்க உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அன்றையதினம் காலை 10 மணியளவில் நீர்வேலி கந்தசாமி கோவில் சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ள ஊர்வ லத்திலும் கலந்துகொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

## வட-கிழக்குப் பாடசாலைகளுக்கு நிக்கொட் 67 மில்லியன் உதவி!

(திருகோணமலை)


வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்குத் தளபாடங்க ளைக் கொள்வனவு செய்வதற்கு நிக்கொட் 67 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் 67,400 மாணவர்களும், 3600 ஆசிரியர்க ளும் போதிய தளபாட வசதிகளின்றி உள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் மர நிழல்களின் கீழும், தரையில் அமர்ந் தும் கல்விகற்று வருகின்றனர். இந்த மாணவர்களுக்கான அடிப்படை வச திகளைப் பெற்றுக் கொடுக்கவே நிக்கொட் 67 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

திருகோணமலையில் இந்த நிதி யைக் கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் நிக்கொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன், நெதர்லாந்து தூதுவர் சுசானா பிளங் கற், வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜா திருமலை மாவட்ட அரச அதிபர் நெலுமதெனிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வட - கிழக்குப் பகுதிப் பாட சாலை மாணவர்களுக்கான அடிப் படை வசதிகளைப் பெற்றுக்கொடுப் பதற்கு நெதர்லாந்து அரசாங்கமும் உதவி செய்யும் என்று நெதர்லாந்து தூதுவர் சுசானா பிளங்கற் இந்த நிகழ்வில் உறுதியளித்தார்.



திருமலையில் பாடசாலைகளுக்கான நிதி கையளிப்பு வைபவத்தில் கலந்துகொண்ட நெதர் லாந்து தூதுவர் மற்றும் அதிகாரிகள்.

## புலிகள் – முஸ்லிம் பிரதிநிதிகள் வவுணதீவில் விரைவில் சந்திப்பர்

### திட்டத்தில் மாற்றமில்லை

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்துள்ள போதி லும், முஸ்லிம்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி சந்திப்பு இடம்பெ றும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை மாவட்ட செய்தித் தொடர்பாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வவுணதீவு பிரதேச செயலகத் தில் திட்டமிட்டபடி எதிர்வரும் 29 ஆம் திகதி முஸ்லிம் பிரதிநிதிக ளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறும். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் அனுசரணையுடன் நடைபெறும் இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலி கள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவுக்கு வீடமைப்பு பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


## ஒலிபெருக்கிகளால் மாணவர் பாதிப்பு

(சுன்னாகம்)

கல்விப்பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைகள் இடம்பெற்றுவரும் இக்காலப்பகுதியில் - ஆல யங்களிலிருநது ஒலிபெருக்கிகள் மூலம் பாடல்கள் ஒலிபரப்பப்படுவ தால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிகாலை வேளைகளிலும், இரவில் நீண்டநேரமும் ஒலிபெருக்கி கள் பயன்படுத்தப்படுகின்றன. இத னால் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பெரும் சிரமப்படுவதாக வும் பெறறோர்கள் தெரிவிக்கின்ற னர்.

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி



## கும்பம்

(அவிட்டம் 3 ஆம் பாதம் முதல், சதயம், புரட்டாசி 3 ஆம் பாதம் வரை)

### உங்கள் விசேட தனித் திறன்கள்

வாக்கு நாணயம். உறுதியான மனம், துணிவு, கடின உழைப்பு, தாயிடம் பாசம், கண்டிப்பு, அறிவுத்திறன்

### உங்கள் பலவீனம்

அவரச முடிவுகள், எதையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்ற துடிப்பு, பிடிவாதம், முன் கோபம், அசட்டுத் தைரியம்.

### 14.04.2003 முதல் 16.08.2003 வரை

சென்ற பல மாதங்களாகக் கும்ப ராசியினருக்கு இடையிடையே சில நன்மைகள் ஆறுதலாக ஏற்பட்டு வந்தாலும், பெரும்பாலான சிரமங்கள் நீடிக்கவே செய்தன. அந்நிலையில் இப்போது நல்ல மாற்றம் ஏற்படும். குடும்பத்தில் இதுவரை கட்டுக்கடங்காது ஏற்பட்டு வந்த செலவுகள் குறைந்து, பொருளாதாரம் சீர்படும். வருமானமும் சற்று உயர்வதால் வாழ்க்கைத்தரமும் உயரும். கடன் தொல்லைகள் நீடித்தாலும் அவற்றின் கடுமை குறையும். குழந்தைகளால் பிரச்சினைகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அர்த்தாஷ்டகத்தில் ராகுவும், ருண, ரோக சத்ரு ஸ்தானத்தில் பலம் வாய்ந்த குருவும் இருப்பதால், வாழ்க்கையில் தற்போது சுகம் குறையும். திருமண முயற்சிகளில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த தடங்கல்கள், தாமதம், பிரச்சினைகள் ஆகியவை இனி இராது. கணவன்-மனைவியரிடையே கருத்து வேற்றுமை சிறிதளவு குறையும். நீதிமன்ற வழக்குகள் நீடிக்கின்றன.

### உத்தியோகம், தொழில், வியாபாரம்

உத்தியோகஸ்தர்களுக்கு வேலை பார்க்குமிடத்தில் ஏமாற்றங்களும், பிரச்சினைகளும் நீடிக்கின்றன. உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கிடைப்பது கடினம். பல மாதங்களாகப் புதிய வேலைக்கு முயற்சி செய்தும் இதுவரை அந்த முயற்சியில் எவ்வித பலனும் ஏற்படாது, ஏமாற்றமடைந்திருக்கும் கும்ப ராசியினருக்கு இப்போது நல்ல வேலை கிடைப்பதற்குக் கிரக நிலைகள் ஓரளவு சாதகமாக மாறி வருகின்றன. ஆதலால் மீண்டும் உங்கள் முயற்சிகளைத் தீவிரமாக்கலாம்.

தொழிலதிபர்களுக்குச் சிரமங்கள் சிறிதளவு குறையும். உற்பத்தி தொடர்ந்து ஒரேசீராக இருக்குமே தவிர, அதிக அளவில் முன்னேற்றமிராது. வருமானம் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். எனினும், நீங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு லாபம் கிடைப்பது கடினம். அபிவிருத்தித் திட்டங்களையும், புதிய முதலீடுகளையும், தொழிலுக்குப் புதிய இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதையும் அடுத்து வரும் நான்கு மாதங்களுக்கு ஒத்திப்போடவும். அதன்பிறகு முக்கியமான கிரகங்கள் மிகவும் அனுகூலமாக மாறுவதால், புதிய திட்டங்கள் அனைத்தையும் பற்றி அப்போது சிந்தித்து முடிவெடுக்கலாம்.

தொழிற்சாலையின் அபிவிருத்திக்காகப் புதிய இயந்திரங்கள் வாங்க வேண்டியிருப்பின் அதனையும் சற்றுத் தள்ளிப் போடுவது நல்லது. வியாபாரிகளுக்கு வியாபாரம் முழு அளவில் முன்னேற்றமடைவது தற்போதைய கிரகநிலைகளில் சற்றுச் சிரமம்தான். ஆதலால் கொடுக்கல் - வாங்கலில் எச்சரிக்கையாகவும், வேகமாக விலை போகாத சரக்குகளை வாங்கிச் சேமிப்பதையும் தவிர்க்கவேண்டும். சில தருணங்களில் சக கூட்டாளிகளுடன் கருத்து வேற்றுமை ஏற்படக்கூடும். தற்போது கிரகநிலைகள் சிறிதளவே அனுகூலமாக இருப்பதால், அவர்களுடன் வாக்குவாதம் ஏற்படும். அதனால் மேலும் சிறிதுகாலத்திற்கு அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

### அரசியலில் ஈடுபடுவோர்

கட்சியில் ஓரளவு ஆதரவு கிடைக்கும். எதிர்ப்புக் குறைந்தாலும் அடியோடு மறைந்தபாடில்லை. மேலிடத்து ஆதரவையும் முழுமையாக நம்ப முடியாத நிலை என்று அரசியல் சம்பந்தப்பட்ட கிரகங்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. ஆனால், கட்சியில் அனைவருடனும் சாதுர்யமாக நடந்து கொள்வது உங்கள் எதிர்கால அரசியல் ஆதாயத்திற்கு உதவிசெய்யும்.

### மாணவமணிகள்

வித்யா ஸ்தானம் சுபபலம் பெற்றுள்ளது. படிப்பில் நல்ல முன்னேற்றம் நீடிக்கும். இந்த ஆண்டு முழுவதுமே உங்களுக்கு அனுகூலமான காலநிலையாகும். படிப்பில் சிறந்த முன்னேற்றம் காத்துள்ளது. வரப்போகும் ஆண்டுத் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். வெளிநாடு சென்று மேற்படிப்புப் படிக்க ஆர்வமிருப்பின், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளலாம். இடையிடையே சிறு தடங்கல்கள் ஏற்படக்கூடும். அத்தகைய தருணங்களில் அதைரியப்படவேண்டாம்.

ஏனெனில், அந்தத் தடங்கல்கள் உடனுக்குடன் விலகும். விசா கிடைப்பதிலும் ஆரம்பத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு, பின்பு விசா கிடைக்கும். ஏற்கெனவே வெளிநாடுகளில் படித்துவரும் மாணவ, மாணவிகளுக்குச் சிறு சலுகைகள் எதிர்பார்க்கலாம்.

### விவசாயத்துறையினர்

விவசாயப் பணிகளில் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். உழைப்பிற்கேற்ற விளைச்சலும், வருமானமும் திருப்திகரமாக இருக்கும். அவ்வப்போது கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்பட்டு அதனால் சிறிது பணமும் விரயமாகக் கூடும். மற்றபடி அதிக சிரமங்கள் ஏற்படாது.

### பெண்மணிகள்

உங்களுக்குச் சிரமங்கள் குறையும். குடும்பச் சூழ்நிலை அபிவிருத்தி அடைவதால் மனதில் கவலைகள் குறைந்து, நிம்மதி ஏற்படும். குடும்ப நிர்வாகத்தில் ஏற்பட்ட பற்றாக் குறை தீரும். குழந்தைகள் நன்கு படிப்பார்கள். ஆதலால் அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. உங்கள் கணவருக்கு உத்தியோகத்தில் சில சிரமங்களும், ஏமாற்றங்களும் ஏற்படக்கூடும். அடுத்து வரும் நான்கு மாதங்களின் பிறகு கணவரின் உத்தியோகம், தொழில் அல்லது வியாபாரம் பற்றிப் பிரச்சினைகள் தீரப்போகின்றன. அதுவரை பொறுமையாக இருங்கள்.

உங்கள் மகளுக்கு வரன் அமையாது திருமணத்திற்கு ஏற்பட்டிருக்கும் தடங்கல்கள் விலகி, நல்ல வரன் அமையும். அதனால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று கவலைப்பட்டு உடல்நலன் கெட்டால் நாளை நல்லகாலம் வரும்போது எவ்விதம் அதை அனுபவிக்க முடியும். நல்லகாலம் விரைவில் காத்திருப்பதால்தான் இப்போதைய கவலைகளை விட்டுவிடுங்கள் எனக் கூறுகிறோம்.

**தமிழ்நாட்டின் பிரபல சோதிட சக்கரவர்த்தி ஏ.எம்.இராஜகோபாலன்**

### ஆரோக்கியம்

ஆரோக்கியத்தில் நல்ல அபிவிருத்தி காணலாம். அவ்வப்போது சிறு உடல் உபாதைகள் ஏற்படக் கூடும். அதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அவை உடனுக்குடன் குணமாகி விடுமெனக் கிரகநிலைகள் குறிப்பிடுகின்றன.

### பொருளாதாரம்

சென்ற பல மாதங்களைவிட இப்போது நிதி நிலைமைகளில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். இருப்பினும் அதற்கேற்ற செலவுகளும் இருக்கும். ஆதலால் அடுத்து வரும் சில மாதங்களுக்குச் சிக்கனமாக இருத்தல் நல்லது.

### 17.08.2003 முதல் 12.04.2004 வரை

குரு பகவான் உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்திற்கு மாறுகிறார். மாறியவுடன் உங்கள் ஜென்ம ராசியையும் பார்வையிடுகிறார். ஆதலால் அனைத்து விடயங்களிலும் மிகச்சிறந்த அனுகூலம் ஏற்படும். கணவர் - மனைவியரிடையே அன்னியோன்யம் ஓங்கும். சிலருக்குப் புத்திரபாக்கியம் ஏற்படும். குழந்தைகள் நலனிலும் சிறந்த அபிவிருத்தி காணலாம். பெண்களுக்குத் தடைகள் நீங்கி நல்ல வரன் அமையும். விவாகத்திற்குக் காத்துள்ள கும்பராசிக் கன்னியருக்கு திருமணயோகம் வந்துவிட்டது. ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். குடும்பத்தின் பொருளாதாரநிலை சீரடையும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பிரச்சினைகள் நீங்கும். வேலை மாற்றத்திற்கு முயற்சி செய்பவர்களுக்கு வேறு நல்ல வேலை கிடைக்கும். உத்தியோகம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ இதுவரை பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேருவார்கள். குரு பகவானின் பார்வை லாபஸ்தானத்தைப் பலப்படுத்துவதால், வியாபாரத்தில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். தொழில் அதிபர்களுக்குச் சிறந்த அபிவிருத்தி ஏற்படும். தொழிற்சாலை வளர்ச்சி அடையும். ஏற்றுமதித்துறையினருக்குப் புதிய ஏற்றுமதி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். கலைஞர்களுக்கு யோக பலன்கள் காத்துள்ளன.

(மீன ராசி நாளை)


# வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



# இரண்டாவது அகவையில்



பெயர் :சி.துஷாந்தன்
முகவரி : ஏ.ஜி.ஏ. லேன், வல்வெட்டித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



-----------------------------------
பெற்றார் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

## நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஓடக்கரையில் அமைந்துள்ள அவ்வோலை அம்மன் ஆலயத்துக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் - திருப்பணி வேலைகளை மேற்கொள்ள இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (23)

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் உலகப் புகழ்பெற்ற "சத்யஜித்ரே"யின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'அகள் துக்' என்ற வங்காள மொழித் திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

## நூல் வெளியீடு

சி.கா.செந்திவேல் எழுதிய "வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுநாள் பி.ப. 4.30 மணிக்கு கட்டைவேலி- நெல்லியடி பல நோக்குக்கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் நூலுக்கான வெளியீட்டுரையை எம். இராசநாயகம் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து கருத்துரைகளும் இடம் பெறும்.

## மரதன், சைக்கிளோட்டம் திருமலையில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின் மரதன் ஓட்டம், சைக்கிளோட்டப் போட்டிகள் நாளை மறுநாள் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

இதில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து 18 வீர, வீராங்கனைகள் திருகோணமலை செல்லவுள்ளனர். அத்துடன், எல்லே பெண்கள் சுற்றுப் போட்டியும் ஆண், பெண் கூடைப்பந்தாட்டப் போட்டியும் எதிர்வரும் மே 3 ஆம், 4 ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ரா)

## முக்கிய கலந்துரையாடல்

(வடமராட்சி)

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து விடியோ, ஓடியோ, திரையரங்கு, சிறு திரையரங்கு உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களால் நடாத்தப்படவுள்ள இக்கலந்துரையாடலில் நிலைய உரிமையாளர்கள், நடத்துநர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

*******************************************

# அருட்தந்தை பஸ்தியன் நினைவாக பத்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

அமரர் அருட்தந்தை மேரி பஸ்தியன் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் - பத்து மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இந்தப் புலமைப் பரிசில்கள் கடந்த வாரம் வெளியாகிய க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளில் கூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

இந்த 10 ,மாணவர்களும் யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

புலமைப்பரிசில் பெறவிரும்புபவர்கள் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள அருடதந்தையர்கள் ஊடாக மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். புலமைப் பரிசிலுக்கு எந்த மதத்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து, அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பெறுபேற்றையும் இணைத்து, 'ஆயர் இல்லம்', த.பெ. இல-02, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (13)

## சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று பி.ப.5.30 மணிக்கு 'சிவநாமம் பேசும் சிவபூமி' என்னும் பொருள் பற்றி சைவப்புலவர் ஏ.அனுஷாந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# பழக் கடைகளை அகற்றிய வருமான வரிப்பகுதியினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை வருமான வரிப்பகுதியினர் பெரியகடைப் பகுதியில் வீதியோரங்களிலிருந்த பழக்கடைகளை நேற்றுமுன்தினம் அகற்றினர்.

வீதியோரங்களிலுள்ள பழக் கடைகளை அகற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் 15 ஆம் திகதிவரை கால அவகாசம் கோரியிருந்தனர்.

எனினும், குறிப்பிட்ட கால அவகாசம் முடிவுற்றும் கடைகள் தொடர்ந்தும் இயங்கியதால் - மாநகர சபையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது. (13)

# ஆரோக்கியமான வாழ்வுக்கு

**கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய சித்திரப் பாடம் மற்றும் யோகாசனப் பயிற்சி ஆகியவற்றின் ஆசிரியை திருமதி இந்திரா தவேந்திரராஜாவுடனான சந்திப்பு.**

கேள்வி: யோகாசனம் பற்றிய அறிவும், ஆற்றலும் எப்படி உங்களுக்கு ஏற்பட்டது? அதை நீங்கள் எங்கு கற்றீர்கள்?

பதில்: 1992 ஆம் ஆண்டு கொழும்பு தொண்டர் வித்தியாலய அதிபர் சந்திரலிங்கம் அவர்களிடம் ஒரு வருட காலத்திற்குள் யோகாசனம் பற்றிய முழுத்திறனையும் பெற்றுக்கொண்டேன்.

தறபோது நான் கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தில் சித்திரம் மற்றும் யோகாசனம் ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறேன். இப்பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போதே, பாடசாலை அதிபர் என்னை இந்தியாவிற்கு அனுப்பி பெங்களூரில்



ஆண்கள் மட்டும்தான் செய்ய வேண்டும் என்றில்லை. 8 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் செய்யலாம். சிறு வயதிலிருந்தே யோகாசனப் பயிற்சியில் ஈடுபடுபவாகள்- சிறந்த ஆரோக்கியத்தையும், அழகையும் பெறலாம்.

கேள்வி: யோகாசனம் செய்வதற்கு வரையறைகள் உண்டா?

பதில்: ஆம். யோகாசனம் செய்யும்போது - சூரிய உதயம் மற்றும் மாலை நேரங்களில் செயயலாம். சாப்பிடமுன்பு செய்யவேண்டும். சாப்பிட்டால் நான்கு மணித்தியாலங்கள் கழித்துப் பயிற்சியில் ஈடுபடுவது சிறந்த ஆரோக்கியத்தைத் தரும். யோகாசனம் செய்ய முன்னரும், செய்தவுடனும் குளிப்பதைத்

## சிறந்த சாதனம் யோகாசனம்

உள்ள விவேகானந்தா கேந்திரத்தில் யோகாசனம் பற்றி மேலும் கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்துதந்தார். அங்கு கற்றதன் மூலமாக யோகாசனம் பற்றிய முழுமையான அறிவை என்னால் பெறக்கூடியதாக இருந்தது.

கேள்வி: யோகாசனத்தைக் கற்பதன் மூலம் மனிதருக்கு நன்மை உண்டா? அது



யோகாசனப் பயிற்சியில் ஈடுபட ஆயத்தமாகும் மாணவிகள்.

பற்றி...

பதில்: ஆம். நிறையவே நன்மை உண்டு. யோகம் என்றால் 'சித்த விருத்தி நிரோதகா்' எனப்படும். சுருக்கமாகச் சொன்னால சந்தோஷம், மன உற்சாகம் என்பவற்றைக் கொடுக்கும். இதன் மூலம் மனிதருக்குப் பல விதத்திலும் உடல், உள ரீதியான நன்மைகளை உண்டாக்குகிறது. மிருக நிலையிலிருக்கும் மனிதர்களை, மனித நிலைக்குக் கொண்டுவந்து, இறுதியில் இறைசக்தியைப் பெறுவதற்கு வழிவகுக்கிறது.

யோகாசனம் வயது வந்தவர்கள்,


தவிர்த்தல் நன்று.

யோகாசனம் செய்ய ஒருவர் விரும்புவாராயின், ஒரு குருவை நாடி அவரின் வழி நடத்தலின்படி பயிற்சியில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் மனதை ஒரு நிலைப்படுத்தி, யோகத்துடன் நாம் இணைந்து செய்வதன் மூலம் அதன் முழுப்பலனையும் பெறமுடியும். ஆசனம் செய்யும்போது உடலை வருத்திக் கஷ்டப்படுத்திக் செய்யக்கூடாது. எம்மால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவுதான் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆசனமும் ஒவ்வொரு நோயைக் குணப்படுத்தச் சாதகமாய் அமையும்.

யோகம் பற்றிய விளககம் பெண்களுக்கு முககியமானது. இந்த யோகம் எட்டுப் படிநிலைகளைக் கொண்டுள்ளன. இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்தியேகாரம், தாரணை, ஆசனம், தியானம், சமாதி எனப்படும்.

யோகாசனம் என்று கூறும்போது- யோகம்+ ஆசனம் = யோகாசனம் எனப்படும். அதாவது, மனிதன் மனதை அடக்குவதற்கு இருக்கின்ற சில இருக்கைகள் என்றே கூறலாம்.

மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு யோகாசனம் சிறந்த சாதனமாக வீளங்குகிறது. இது பரந்துபட்டது. மாபெரும் விஞ்ஞானமாகக் கருதப்படுகின்றது. இது பல ஆராய்ச்சியாளர்களால் நிரூபிக்கப்பட்டதும், ஏற்றுக்கொளளப்பட்டதும் ஆகும். இதனை 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பதஞ்சலி முனிவர் அறிமுகம் செய்தார்.



பொதுவாக நவீன விஞ்ஞானம் ஆக்கிரமித்த நெருக்கடி நிறைந்த உலகில் மனிதன் பல வித விடயங்களுக்கு முகங்கொடுக்க வேணடி இருக்கின்றான். பதற்றம், ஏக்கம், அவசரம், ஓய்வின்மை, நெருக்கடி போன்ற பலவித பிரச்சினைகள். இவையெல்லாம் மனிதனுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

யோகாசனம் மன அழுத்தத்தைக் குறைப்பதுடன், பலவித நோய்களையும் குணமாக்குகிறது.

குடும்ப நிலையைப் பொறுத்தளவில் வீட்டில் ஏற்படுகின்ற அதிகளவான பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியவர்களாகப் பெண்களே இருக்கின்றார்கள். ஆகவே, பெண்களுக்கு யோகாசனம், தியானம் என்பன கூடிய பலனைக் கொடுப்பதன் மூலம், அப்பெண்களின் வீடு, சூழல் என்பன தெய்வீகமுள்ளதாக மாற்றப்படும் என்பது எனது கருத்து.

சுவாசப் பயிற்சியை எடுத்துக் கொண்டால்- நாம் சாதாரணமாகவே சுவாசிக்கும் போது எமது சுவாசப்பை பூரணசுவாசம் பெறுவதில்லை. ஆனால், நாம் சுவாசப் பயிற்சிகளை செய்யும்போது எமது சுவாசப்பை பலவித கோணங்களிலும் விரிந்து சுருங்குகின்றது. அதன் காரணமாக சுவாசப்பை முழுவதும் சுவாசம் செய்வதற்கு ஏதுவாக இருக்கின்றது. சுவாசம் சம்பந்தமான குழாய்கள் - அடைப்புகள் நீங்கித் தூய்மை அடைகின்றன. இதன் காரணமாக ஆஸ்மா, இருமல், சளி, மூக்கடைபபுப் போன்ற நோய்கள் குணமடைவதுடன், நோய் அணுகாமலும் தடுக்கமுடியும்.

**நேர்காணல்:**
**உஷா, கலானந்தி**

# தலைவி நீ தலை நிமிர்!!!



ஓர் இலக்கை அடைவதற்குத் திட்டந் தீட்டுபவர் ஒருவராக இருக்கலாம். ஆனால், அத்திட்டத்தை அடையப் பலர் சேர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு சேர்ந்து செயற்படுவோர் சரியாகச் செயற்பட்டு, இலக்கையடைய வழிநடத்துவதற்குத் தனித்திறமை வேண்டுமென்பதை முன்னரே பார்த்தோம்.

வீட்டிலென்றாலும், காரியாலயத்திலென்றாலும் இவ்வாறு செயற்படுவோரை ஒரு குழுவாக இணைந்து செயற்படச் செய்வது அவசியமாகும். அனைவரும் இணைந்து செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.

முதலில் இலக்கைப் பற்றியும், அதன் முக்கியத்துவம், அதனை அடைய எவ்வாறு செயற்படப் போகின்றோம் என்பது பற்றிய திட்டம், இலக்கை அடைவதால் அடையப் போகும் நன்மைகள் என்பன பற்றியும் போதியளவு அறிந்து கொள்ளக்கூடியதாக அனைவருக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும். இவை பற்றிய தெளிவு அவர்கள் புரிந்துணர்வுடனும், உற்சாகமாகவும் செயற்பட பெரிதும் உதவும்.

அடுத்து அந்த இலக்கில் ஓர் ஈடுபாட்டை அனைவருக்குமேற்படுத்த தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும். அடிக்கடி அது பற்றி உற்சாகமாகப் பேசி, அவர்களுடன் கலந்துரையாடும்போது அவர்களது மனங்களில் இயல்பான ஈடுபாடு ஏற்படும்.

உதாரணமாக, ஓர் உற்பத்திப் பொருளைத் திட்டமிட்டளவு உற்பத்தி செய்து வெற்றிகரமாகச் சந்தைப்படுத்துவது எமது இலக்கென்றால், உற்பத்தி செய்வோருடன் அதன் தரம் சிறந்ததாக இருக்கவும், அதிகளவு உற்பத்தி செய்யவும் என்னென்ன செய்ய வேண்டுமென அடிக்கடி அவர்களைச் சந்திக்கும் நேரங்களிலெல்லாம் கலந்துரையாடினால் அவர்களுக்கும் அந்த இலக்கை அடைய வேண்டுமென்னும் ஓர் உத்வேகம் இயல்பாக ஏற்படும்.

வீட்டில் அழகான மலர்த் தோட்டமொன்றை உருவாக்குவது உங்கள் நோக்கமானால், அதில் அனைவரும் இணைந்து செயற்படச் செய்யவேண்டும். 'இது அம்மாவின் வேலை' என்று வீட்டிலுள்ள அனைவரும் விட்டு விடுவதுதான் பெரும்பாலான வீடுகளில் காணப்படும் வழமை.

உங்கள் உரையாடல்கள் மூலம் வீட்டிலுள்ள அனைவரும் அதில் ஈடுபடச் செய்வதிலேதான் உங்கள் வெற்றி தங்கியுள்ளது. அவர்கள் இயல்பான உற்சாகத்துடன் அவ் வேலையில் தாமும் பங்குகொள்ளச்செய்வது உங்கள் திறமையாகும்.

பங்குகொள்ளும் ஒவ்வொருவரது செயற்திறனைப் பொறுத்து அவர்களுக்குரிய வேலைகளைக் குறித்துக் கொடுத்துவிட வேண்டும். ஏற்ற வேலைகளில் அவர்கள் ஈடுபடும்போது வேலை சிறப்பாக நடைபெறும். இவ்வாறு வேலைகள் கொடுக்கப்படாதவிடத்து, யார் எந்த வேலையைச் செய்வதென்பதைத் தெரியாதநிலை தோன்றும். இதனால், சில வேலைகள் செய்யப்படாமலே விடப்பட்டு, திட்டமே பாழாகிப் போய்விடலாம்.

வீடுகளில் குடும்ப அங்கத்தவர் அனைவருக்கும் வேலைகள் கொடுக்கப்பட வேண்டும். வீட்டுத் தலைவிதான் சகல வேலைகளும் செய்யவேண்டுமென்று நினைப்பது தவறு.

குறித்த வேலை ஒருவருக்குரியது என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும், தேவையேற்படும் போது மற்றவர்களுக்கும் உதவிசெய்து, அவர்களது வேலைகளில் பங்குகொள்ளும் மனநிலை அனைவருக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும். குழுவாகச் செயற்படும்போது இவ்வாறு ஒருவருக்கொருவர் உதவும் மனோபாவம் நிச்சயம் தேவையான ஒன்றாகும்.

பலர் குழுவாக வேலை செய்யுமிடத்தில் கருத்து முரண்பாடுகள் காணப்படுவது இயற்கை. அவற்றைப் பொறுமையாகக் கேட்டறிந்து, தீர்த்து வைப்பது ஒரு தலைவிக்குரிய சிறந்த திறமையாகும்.

விட்டுக் கொடுத்து, புரிந்துணர்வுடன் செயற்பட அனைவரையும் படிப்படியாகப் பயிற்ற வேண்டும். முரண்பாடுகளிடையே ஒற்றுமையாகச் செயற்பட வைப்பது ஒரு கலையாகும். முரண்பாடுகளை ஆக்கபூர்வமாக்குவதும் அப்படியே. இது விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். இது குறித்த அறிவும் தலைவிக்கு அவசியமானதே.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# தாகம் தணிக்கும் சர்பத்



### ரோஜாப் பூ சர்பத்

**செய்முறை:** உலர்ந்த ரோஜாப் பூக்களைச் சுடுநீரில் பத்து மணித்தியாலங்கள் ஊறவைத்து வடிகட்டவும். சீனிப்பாகு காய்ச்சிய பின், கடைசியாகப் பன்னீரைக் கலந்து ஒன்றாய் கிளறி ஆறினதும், போத்தலில் அடைத்து அருந்தவும். இது மூலச் சூடு, உஷ்ணம், பித்தம் போன்றவற்றைக் குணப் படுத்தும்.

### தாமரைப்பூ சர்பத்

**செய்முறை:** உலர்ந்த வெண்தாமரைப் பூக்களைத் தண்ணீரில் 10 மணித்தியாலங்கள் ஊறவைத்து நன்றாக வெந்தபின், ஓரளவு இறுகியதும் வடிகட்டிக் கொள்ளவும். அத்துடன், சர்க்கரைப்பாகையும், பன்னீரையும் சேர்க்க தேன் போல வரும். அதனைப் போத்தலில் அடைக்கவும். தினமும் அருந்தி வந்தால் பித்தம், காய்ச்சல், தலைவலி, வயிற்று வலி, தேக எரிவு என்பன நீங்கும்.

### மாதுளம்பழச் சர்பத்

**செய்முறை:** சர்க்கரையைத் தண்ணீரில் கரைத்து அடுப்பில் வைத்துப் பாகாகக் காய்ச்சி, அத்துடன் பழுத்த மாதுளம்பழ ரசத்தைச் சேர்த்து நன்றாகக் கிளறவும். தேன் பதமாக வந்ததும் இறக்கி, ஆறியதும், போத்தலில் அடைத்து தினமும் அருந்தி வந்தால் பித்தம், மயக்கம், வாய்வு என்பன நீங்கும்.

### இஞ்சி சர்பத்

**செய்முறை:** இஞ்சியை மேற்தோல் சீவி சுத்தம் செய்துகொண்டு, துண்டாக நறுக்கி சுடுநீரில் ஐந்து மணித்தியாலங்கள் ஊறவைத்து, வடிகட்டி, சீனி சேர்த்துப் பதமாகக் காய்ச்சி தேன்பதத்தில் இறக்கி வைத்து தினமும் அருந்தி வந்தால் வயிற்று மந்தம் நீங்கிப் பசி உண்டாகும்.

# ஒரு பூவின் பயணம்

புத்தம் புதிய வெற்றுத்தாளாய்
சிரிக்கின்றாய்
எத்தனை கோடி வரிக் கவிதைகள்
உயிர்க்கின்றன
நின் புன்னகையில்;
நின் குறுநடையில்;
எத்தனை கோடி நட்சத்திரக் கற்கண்டுகள்
தெறித்து விழுகின்றன
என் இதய சமுத்திரத்துள்...

- கல்லூரன்

அத்தியாயம் 03

குழந்தை ஒன்று பிறந்திருக்கிறது. வீடெங்கும் சந்தோஷப் பூக்களைத் தூவியிருக்கிறது காலம். பெற்றவர்கள் பேணி விளையாடக் கிடைத்த வரம் அது. உற்றவர்கள் மகிழ வந்த வெகுமதி அது. அக்குழந்தை அழுகின்றது. சுவாசித்தலின் சீரான ஆரம்பம் அது. அதனால், சுற்றம் மகிழ்ந்து சிரிக்கின்றது. வீடெங்கும் குதூகலம். திருமண வாழ்வின் நிறைவினைக் குழந்தையின் வரவு குறிப்பது எமது சமூக இயல்பு. எனவே - ஆண் குழந்தையோ, பெண்குழந்தையோ முதலாவது குழந்தை மனமுவந்து ஏற்கப்படுகின்றது. துரதிர்ஷ்டவசமாகக் குழந்தைகள் கிடைக்காத பட்சத்தில் பெரும்பாலும் பெண்மீதே குற்றம் சுமத்துகிறது நமது சமூகம் என்பதை மறுப்பதற்கில்லை.

குழந்தைகள் வாழ்வினைச் செழிக்க வைக்கும் வரங்கள். வம்சம் தழைக்க வந்த புத்தம் புதிய தளிர்கள். களங்கமற்ற இதயம், காரணகாரியமற்ற அன்பு, முல்லைப் பூ மலர்வு போலான வெள்ளைச் சிரிப்பு, போட்டி, பொறாமையற்ற வாழ்வு, மற்றவர்களுடன் தம்மை ஒப்பிட்டுத் துயரங்கொள்ளாத தன்மை சகலதும் வாய்ந்திருக்கின்ற குழந்தைகள், இனிமையின் மறுவடிவங்கள் எனினும் மிகையல்ல.

பூவாய் மலர்கிற சிரிப்பும், புதுத்தேனாய் ஊறும் மழலையும் சிறுகை நீட்டிக் குறுநடை பயில்கின்ற அழகும் கருதுகையில் ஆணென்ன! பெண்ணென்ன! எவரது இதய சமுத்திரத்துள்ளும் நட்சத்திரக் கற்கண்டுகள் தெறித்து விழத்தான் செய்யும்.

வறுமை, குடிப்பழக்கம் அல்லது போதைப் பொருளுக்கு ஆளான குடும்பத்தலைவர்கள் நோய்வாய்ப்படுதல் போன்ற பொதுப் பிரச்சினைகள் ஆண் - பெண் குழந்தைகள் இருபாலருக்கும் பொதுவான பாதிப்பை ஏற்படுத்தலாம்.

'இந்த அழகிய கிண்ணத்தில்
மலர்களையேனும் அடுக்குவோம்
அரிசிதான் இல்லையே'

என்ற முஸ்லிம் கவிஞரின் கவிதையுள் புதைந்து கிடக்கிறது வறுமை. அதைத் துயரமாக அன்றி, அழகாகவே சொல்கிறார் அவர். அதுபோல வறுமையிலும் செம்மையாய் வளர்க்கப்படும் குழந்தைகள் உண்டு. பொதுவானவற்றைப் புறந்தள்ளிப் பெண்குழந்தை என்கின்ற பாலியல் பாகுபாட்டின் விளைவுகளை எடுத்துநோக்குவோம்.

பெண் குழந்தை பிறந்திருக்கிறது. வீட்டுக்கார இளந்தாயிடம் பூரிப்பு. மிகப் பெரும்பாலும் அது முதற்குழந்தையாக இருக்கிறது. அவளுக்கு வண்ணச்சட்டைகள் போட்டு வடிவு பார்க்கமுடியும். சுருண்ட முடியைப் பின்னி அழகு பார்க்க முடியும். அக்குழந்தை சிறுநடனங்களை ஆடிக்காட்டுவாள். இனிய மென்குரலில் பாடுவாள். தாய்தந்தையரின் விளையாட்டுப் பொம்மை அவள். இப்பெண் குழந்தை தந்தையின் சொல்லுக்கு அடங்கி நடப்பாள். பின்னாளில் கணவனின் எண்ணத்தின் வழி புரிந்து, குறிப்பறிந்து நடப்பாள். கல்வி கேள்விகளில் அவள் சிறந்து விளங்குவாள். கணவனுக்குப் பெருமை தருபவளாக இருக்கின்ற அதேசமயத்தில், அவனை மேவியவள் அல்ல அவள். இங்கு காட்டப்படுகின்ற பெண் எமது சமூகத்தின் எதிர்பார்ப்பு.

'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா - எனக்கு
இன்பம் சேர்க்க மாட்டாயா?'



ஆறுதலளிப்பதில் பெண்ணுக்கு நிகரில்லை. சகோதரியாய்,

## முள்ளிலே சிக்கும் தேவதைச் சிறகோ...

தாயாய், மனைவியாய்ப் பலபடிகளினூடாகச் சமூகத்திற்கு ஆறுதலளிப்பவள் அவள். கலைகள் பலதின் இருப்பிடம் அவள். பெண்குழந்தை பிறப்பிலேயே அமைதியான, துடுக்குத்தனமற்ற, அடக்கமான; அதிர்ந்து பேசாத இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எமது சமூகத்தில் உள்ளது.

ஒரு வீட்டில் இரட்டைக் குழந்தைகள். ஆண், பெண் இருபாலர். இருவரும் ஒரேதவறினைச் செய்து விடுகின்றார்கள். வீட்டில் உள்ளோர் குறிப்பாக, வயதானவர்கள் இச்சந்தர்ப்பதில் பெண் பிள்ளையையே அதிகம் கடிந்து கொள்வார்கள். பெண் பிள்ளை என்ற நினைப்பைச் சகல பொழுதுகளிலும் அவள் நினைவில் பதித்திருக்க வேண்டும். அது இச்சமூகத்தின் எழுதப் படாத சட்டம் இல்லையா?

பெண்பிள்ளை பிடிவாதம் பிடிப்பதுகூடாது. இசைந்து நடத்தல் அவளது இயல்பாக இருப்பதே இங்கு வேண்டப்படுகிறது. அதேசமயம் பிடிவாதம் பிடித்து, மண்ணில் புரண்டு அழுகின்ற அதேவயது ஆண்பிள்ளையைக் குடும்பத்தினர் நல்லவார்த்தைகள் சொல்லித் தேற்றும் சந்தர்ப்பங்கள் உண்டு. ஏனெனில், வன்முறைக்கு ஆண்பிள்ளைகள் உடனடியாகப் பணிந்து விடுவதில்லை.

பெண்பிள்ளை உரத்துச் சிரிப்பது கூடாது. அவள் கோபத்தை வெளிப்படையாகப் பேசிக்கொள்ளமுடியாது. ஓடுதல், குதித்தல் சிறுபையன்களுடன் நீச்சலடித்தல் கூடாது. மெல்லச் சிரிப்பாள் நல்லபெண். அவள் அதிராது நடப்பாள். ஆண்பிள்ளைகள்போல ஓடியாடாமல் தரையில் அமர்ந்து தாயம் போன்ற விளையாட்டுக்களை அல்லது ஆபத்தற்ற விளையாட்டுக்களை விளையாடுவாள் அவள். இத்தகைய படிமச் சிந்தனைகளில் ஊறி வளர்கின்ற பெண் பிள்ளை - மரபுகளினாலான அடக்குமுறையைத் தன்மீது தானே வலிந்தேற்றிக் கொள்கிறாள். சமூகத்தின் எதிர்பார்ப்பு பெண் வாழ்வின் நடைமுறையாகிறது. இதற்கு எதிரான வாதங்கள் சிலரால் எழுப்பப்படக்கூடும். எனினும், இத்துணை முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் மரபுகளாலான அடக்குமுறை யாழ்ப்பாணப் பெண்ணின் குழந்தைப் பருவந்தொட்டு இறப்புவரை தொடர்வதை மறுப்பதற்கில்லை. சில குடும்பங்களில் போஷணை, ஓய்வு, கல்வி என்பவற்றில் ஆண்பிள்ளைக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் அனைத்துலகப் பெண்கள் பிரகடனத்தின்படி - 'பெண்களும் ஆண்களும் இரு வெவ்வேறு உலகங்களில் வாழ்வதுபோல நடத்தப்படுகிறார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, உடல் பராமரிப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, பொழுதுபோக்குக்கான நேரம் என்பவற்றில் இருபாலருக்கும் சமத்துவம் இல்லை. கல்வியறிவு கருதப்படத்தக்க நிலையிலுள்ள யாழ்ப்பாணத்தில், பாலியல் புறக்கணிப்பு குறைவாக இருப்பினும், இல்லாமல் இல்லை' என்பதை நாம் மறுக்க முடியாது.

இங்கு பாலியல் புறக்கணிப்பு என ஒட்டுமொத்தமாகப் போர்க்கொடி உயர்த்துவது முடியாது. எனினும், பெண்பிள்ளைகள் - ஆண்பிள்ளைகளுக்குச் சமமாக வளர்க்கப்படுவதில்லை. பெற்றோரின் அன்பின் மிகுதியாலும் பெண்பிள்ளைகள் தனித்தியங்க முடியாதபடி வளர்க்கப்படுகிறார்கள். பெண்பிள்ளைகளைப் பூவாய்த் தாங்கிக் கொள்கிற பெற்றவர்களும், சகோதரர்களும் உண்டு. நாளைய முள்முகம் காட்டும் சமூகத்தில், இப்பெண் பிள்ளைகளின் நிலை என்ன?

வாழ்க்கை ஒரு பெருங்கடல். அங்கு பெருங்கொந்தளிப்புக்கள் உண்டு. புயல் மையங்கொள்வதுணடு. எதிர்பாராத பொழுதில் எதிர்பாராத பயங்கரங்கள் எதிர்கொள்ளக்கூடும். இங்கு எதிர்நீச்சலிடும் துணிவைப் பிள்ளைகளிடம் வளர்த்தாக வேண்டும். மலலாந்து படுத்து நீந்துதல் நீச்சலில் ஒருவகை யுக்தி. சகல நேரங்களிலும் கைகளையும் கால்களையும் உதைத்துத் தத்தளித்தல் இன்றி சுகமாக வாழ்க்கைக் கடலைக் கடக்கும்படி, தன் சின்னமகளை வழிப்படுத்துகிறார் இங்கொரு தந்தை. இதோ!

'உன் ஒளிர்வில்
கண் கூசுமுலகு!
மல்லாந்து படுத்து
நீந்து மகளே...
சுழிகளுள் ஆழாத
சுகமுனதென.'

**ச.சாரங்கா**

மூட மரபுகள் சிறையிடாத சிறுபெண்ணாய் உங்கள் மகள்? ஒருகணம் சிந்தியுங்கள். சின்னஞ்சிறு தேவதை அவள். அவளைக் கைவீசி நடக்க அனுமதியுங்கள். சுயமாகச் சிந்திப்பாள் அவள். வளமான வாழ்வை வாழ்ந்தபடியே நடப்பாள் அவள். இன்னும் செழிப்பான காலத்தை நோக்கி...

(பயணம் தொடரும்)

## வெட்டுத்துணிகளில் உங்கள் கைவண்ணம்

கைவினைப் பொருட்கள் செய்ய எமக்குக் கொள்ளை ஆசைதான். ஆனால்- எங்கே, எப்படிப் பொருட்களைச் சேகரிப்பது என்பதில்தான் நிறையக் குழப்பம். செலவே இல்லாமல் சந்தோஷமாக ஆரம்பியுங்கள். பொறுமை ஒன்றுதான் இதற்குத் தேவைப்படும் மூலதனம். தையல் கடைக்குச் சென்று கழிவுத் துணிகளைச் சேகரியுங்கள். அழகான குஷன் கவர், கால் துடைப்பம், மேசை விரிப்பு என்பவற்றை அழகாகச் செய்யலாம்.

*தேவையான பொருட்கள்*

நீலம், பச்சை, மஞ்சள், மண்ணிறம் என்ற பல்வேறுபட்ட நிறங்களிலான வெட்டுத் துணிகள், தையல் ஊசி, 10 ஆம் நம்பர் நூல், கால் மீற்றர் தடிப்பான துணி.

**செய்முறை**

உங்கள் கையை அகலமாக விரித்து, அந்த அளவிற்குத் தடிப்பான துணியை வட்டமாக வெட்டிக் கொள்ளுங்கள்.



(கால் மீற்றர் துணியில் இந்த அளவிற்கு 6 வரும்) அதை எடுத்து 3 அங்குல நீளமும் 2 அங்குல அகலத் துண்டுகளாக வெட்டுங்கள். 3 அங்குல நீளப் பகுதியைப் படத்திலுள்ளபடி 1/2 அங்குலத்துக்கு மடித்துக்கொண்டு கோன் வடிவில் உருட்டுங்கள். மொட்டு மாதிரி வரும். இதேபோல நிறையத் துண்டுகள் தேவைப்படும். ஆனால், எல்லாவற்றையும் முதலிலேயே செய்து வைக்கத் தேவையில்லை. தைக்கும்போது ஒவ்வொன்றாக மடித்துத் தைத்தால் போதும். பின்னர் வட்டமாக வெட்டிய தடித்த துணியின் மேல் - கோன் போன்று மடித்த துணியை, அதன் கூரான பகுதி தடித்த வட்டத்துணியின் வெளிப்பக்கம் வருமாறு வைத்துத் தையுங்கள். தையல் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் படத்தில் பாருங்கள். தையல் வலுவாக இருப்பதற்காகத்தான் 10 ஆம் நம்பர் நூலை உபயோகிக்கிறோம். கோனின் இரு ஓரங்களிலும் தையல் வெளியே தெரியாதவாறு தைக்கவேண்டும். இதேபோல அடுத்தடுத்து அதேநிறத் துண்டை நெருக்கமாக வைத்துத் தைக்க வேண்டும்.



இனி அடுத்த அடுக்கை ஆரம்பிக்கலாம். இதற்கு வேறு நிறத் துணியைப் பாவிக்கலாம். இவ்வாறு அடுக்கு அடுக்காகத் தைப்பதன் மூலம் அழகிய மேசை விரிப்பைப் பெறலாம்.

## மஞ்சள்...

மஞ்சள் ஒரு புனிதமான மணப்பொருளாகும். நமது வாழ்க்கையில் பல்வேறு முறைகளிலும் கலந்துவிட்ட ஒன்று.

அதன் பயன்கள் ஏராளம். உணவுக்கு மணமூட்டவும்,, கிருமிநாசினியாகவும், மருந்துகள் தயாரிக்கவும், அழகு சாதனப்பொருள் தயாரிக்கவும் பயன்படுகிறது. பொருளாதாரம், மருத்துவம், தொழில், ஆன்மீகம் என எல்லாத்துறையிலும் மஞ்சள் பெரும் பங்கு வகிக்கின்றது.



மஞ்சளின் தாயகம இந்தியா. உலகிலேயே இங்குதான் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கறிமஞ்சள், நாக மஞ்சள், காஞ்சிர மஞ்சள் என்று பலவகை இருந்தாலும்- குச்சி மஞ்சள், குண்டு மஞ்சள் இரண்டுமே அதிகம்

## மங்களம்...

பயன்படுகிறது. குச்சி மஞ்சள்- சமையலுக்கும், எண்ணெய் எடுக்கவும், மருத்துவத்திலும் பயன்படுகிறது. குண்டு மஞ்சள் - பெண்கள் முகத்தில் பூசவும், அழகு சாதனப்பொருள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

கோயில்களில் மஞ்சள் பிரதானமாகப் பயன்படுகிறது. மஞ்சள் நிறமும், அந்த நிற ஆடைகளும் எதிரிகளின் தீய எண்ணத்தை ஒழிக்கின்றன என்பது நம்பிக்கை. மஞ்சளுக்குப் பிரபஞ்சத்திலுள்ள நுண்ணிய கதிர்களைக் கவரும் ஆற்றல் உண்டு. எனவே, சக்தியுள்ள இயற்கைப்

## மருத்துவம்...

பொருளாக இது திகழ்கின்றது. மஞ்சளின் பொருளாதார ரீதியான, தொழிலியல் ரீதியான பயன்களும், மருத்துவக் குணங்களும் அடுத்தவாரம் தொடரும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செயற்பாலது ஒரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## சமூகத்தைக் கட்டிக் காக்க....!

யாழ்.மாவட்டத்தில் பரந்து வேரூன்றியிருக்கும் சமூகச் சீர்கேடுகளைக் களைவதில் - விடுதலைப் புலிகள் தீவிர கவனம் செலுத்தப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

பாலியல் வன்முறை, திருட்டு, கொலை, கசிப்பு உற்பத்தி, குழு மோதல்கள், பெண்கள் மீதான வரைமுறை தாண்டிய கேலிப்பேச்சுக்கள் எனப் பல்வேறு வழிகளிலும்- யாழ்.குடாநாட்டில் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ள நிலையில், விடுதலைப் புலிகள் அவற்றைத் தடுப்பதில் அக்கறை காட்டியிருப்பது மக்கள் மத்தியில் பெருவரவேற்பைப் பெற்றுள்ளது.

சமூகப் பாதுகாப்புக்கும், அமைதிக்குமான ஒழுங்கமைப்புச் சரிவரச் செயற்படாத நிலையில் அல்லது அவ்வாறான ஒழுங்கமைப்புப் பற்றிய நியாய அச்சம் குற்றம் புரிபவர்களிடையே உருவாகத் தவறியபோது - குற்றச் செயல்கள் புரிவதற்கான தூண்டலாகவே அவை அமைந்துவிட்டிருந்தன.

இவ்வாறான சூழல் - கடந்த சில ஆண்டுகளாகவே யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்திருந்தது. குற்றம் புரிபவர்களின் அடாவடித்தனம் ஒருபுறமென்றால்- அக்குற்றச் செயல்களை கண்டிப்பதற்கும் மக்கள் முன்வர அஞ்சிய நிலை இங்கு வேரூன்றியிருந்தது.

அடுத்த வீட்டில் ஏதாவது நடப்பது தெரிந்தாலும் - அதுபற்றி ஓடிச்சென்று தடுக்கவோ, குரலெழுப்பவோ முன்வராது, அச்சம் சூழ்ந்தவர்களாக மக்கள் வாழ்ந்து வந்தனர். இதுவேறு, குற்றம் புரிபவர்களுக்கு ஊக்கந்தருவதாகவே அமைந்துவிட்டது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டவர்களை தமக்கேற்றவாறு திசைதிருப்பக் கூடியவாறு - நெறிமுறை மீறிய செல்வாக்கைப் பயன்படுத்தவும் குற்றமிழைப்பவர்கள் தவறவில்லை.

இந்தவகையில் - குற்றம் புரிவது பற்றிய அச்சமோ, நீதிமுறை தொடர்பான நியாயமோ இன்றி - யாழ். குடாநாடு சமூகச் சீர்கேடுகள் வெகு சுதந்திரமாக நடக்கும் களமானதை மக்கள் நன்கறிவர்.

போர்நிறுத்தம் அமுலானதன் பின்னர், ஓரளவுக்கு குற்றச் செயல்களின் வீதம் குறைவடையுமாப் போன்று தென்பட்டது. ஆனால் - மீண்டும் அண்மைக் காலத்தில், இது பழைய நிலையைத் தொட்டுவிடுமோ என்று அஞ்சத்தக்கதாக - சமூகச் சீர்கேடுகள் அதிகரிக்கவே செய்தன.

இந்தக்கட்டத்திலேயே - பொது அமைப்புக்களதும், சமூக நிறுவனங்களதும், பொது மக்களதும் வேண்டுகோள்களின்பேரில், விடுதலைப் புலிகள் சமூகச் சீர்கேடுகளை வேரறுப்பதற்கு தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு - பல்வேறு சமூக அமைப்புக்களும் பூரணமான ஒத்துழைப்பு வழங்க முன்வந்திருப்பதோடு - மக்களும், இந்த விவகாரத்தில் ஆர்வம்காட்ட ஆரம்பித்துள்ளனர்.

சமூக ஒழுங்கும், கட்டுப்பாடும் மிக முக்கியமான, பெருமைக்குரிய விடயங்களாகப் போற்றப்பட்ட யாழ். மண்ணில் - மீண்டும், சமூகச் சீர்கேடுகள் பற்றிய அச்சமின்றிய சூழலொன்று நிலவ வேண்டும் என்ற பெரும் எதிர்பார்ப்பு மக்கள் மனதில் தோன்றியிருக்கிறது.

யாழ். நகரின் வீதிகளில் மாலை நேரத்துக்குப் பின் பெண்கள் நடமாட அஞ்சிய துயரமும்,

தெருவுக்குத்தெரு - பகுதிக்குப் பகுதி - வேலை வெட்டியற்று, தமிழகச் சினிமாவின் பாதிப்புக்களாலும், மதுபோதையும், போதை மருந்துகளும் தந்த ஊக்கத்தினாலும் - 'குறூப்களை' அமைத்து அடாவடித்தனமும், அக்கிரமும் செய்த ஊதாரிகளின் செயல்கள் விளைவித்த பதற்றமும்,

இளம்பெண்களையும், ஏன் சின்னஞ்சிறு மலர்களையும் கூட விட்டுவைக்காது பாலியல் வன்முறைக்குள்ளாக்கும் மிருகத்தனம் பொருந்தியவர்களது கொடூரங்களும்,

கசிப்பு என்னும் பெயரில், மனித உயிர்களை சிறுகச் சிறுக அழிக்கும் உயிர்கொல்லியை உற்பத்தியாக்கும் மானுட ஓநாய்களுமாக - குடாநாடு சிக்கிச் சீரழிவது இனியாவது தணிய வேண்டும், தடுக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்திலும், ஏக்கத்திலும் இருக்கும் மக்கள் -

விடுதலைப் புலிகளின் சமூகச் சீர்கேடுகளை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்கும்போதுதான் இந்தச் சமூகக் களையெடுப்பு முழுமைபெறும்.

இந்தப் பெரும் பணி வெற்றிபெறும்போது, சமூகம் நிம்மதியும், அமைதியும், ஒழுக்கமும் கொண்டதாக சிறப்புப்பெறும். இளைய சமூகமும் அத்தகையதொரு ஆரோக்கியமான சூழலில் வாழும்போதே நிறைவான மனிதர்களாக உருவாகுவார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக- தமிழினத்தின் கௌரவமும், கலாசார - பண்பாட்டுப் பேறும் அப்போதுதான் காக்கப்படும்.

# பேச்சுக்களை சீர்குலைக்க முனைந்தவர்கள் சமாதானம் நின்றுவிடுமோ என்று அஞ்சுகின்றனர்

## நாடாளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர்

(கொழும்பு)

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்த மறுகணமே, இச்சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கவென வரிந்துகட்டிக் கொண்டு நின்றவர்கள் எல்லாம் திக்குமுக்காடிப் போயுள்ளார்கள். சமாதானத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டுவிடுமோ எனத் திகிலடைந்துள்ளார்கள்.

அதனால்தான் எதிர்க்கட்சியினர் - ஊடகவியலாளர் மாநாடுகளைக் கூட்டிப் பேச்சுவார்த்தைக்குத் தடை ஏற்படக் கூடாது, சமாதானம் சீர்குலையக் கூடாது என்றெல்லாம் அறிக்கைகள்விட ஆரம்பித்துள்ளார்கள்.

இவ்வாறு, நேற்று புத்தளம் நகரசபை மைதானத்தில் நடைபெற்ற "தம்பபன்னி சிங்கள - தமிழ் புத்தாண்டு விளையாட்டு விழாவை" ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் எ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் அஸ்வர் தொடர்ந்து உரையாற்றுகையில் - நெடுங்காலமாக மூடப்பட்டிருந்த வீதிகள் எல்லாம் திறக்கப்பட்டு விட்டன. வீதிகளில் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி கொண்டிருந்த சோதனைச்சாவடிகள் எல்லாம் அகற்றப்பட்டு விட்டன. இதனால், மக்கள் எதிர்நோக்கிய பல சிரமங்கள் அகன்றுவிட்டன.

எங்கு எது நடக்குமோ, என்ன நடக்குமோ எனப் பயந்து வாழ்ந்த மக்கள் நிம்மதியாக நடமாடத் தொடங்கியுள்ளார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் புலிகளின் ஒரு அறிவிப்பு சமாதானத்துக்குக் குழிபறிக்க முனைந்தோரையெல்லாம் சிந்திக்கத் தூண்டிவிட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளின் பெறுமதி இப்போதுதான் தெரிய ஆரம்பித்துள்ளது.

மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் கூட இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று ஊடகங்கள் வாயிலாக அறிக்கை விட்டிருப்பதானது, பிரதமரின் சமாதான முயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கிறது.

இலங்கையின் ஆதி வரலாற்றில் தம்பபன்னிக்குத் தனியிடம் உண்டு. அக்காலத்தில் இங்கு சமாதான யுகம் மலர்ந்திருந்தது. காலப்போக்கில் அரசியல்வாதிகளின் குழப்பங்களால் சமாதானம் சின்னாபின்னமானது.

அதனை இப்புதுயுகத்தில் மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டால்தான் நாட்டில் சுபீட்சம், அபிவிருத்தி ஏற்படும். இன்றேல், நம் நாட்டிற்கு விமோசனம் என்பதே கிடையாது போய்விடும். இத்தகைய இனஒற்றுமைக்கு இவ்வாறான விளையாட்டு விழாக்கள் வழி அமைக்கும் என்றும் அமைச்சர் அஸ்வர் மேலும் கூறினார்.

# சிறான் நிறைவேற்றுப் பணிமனை மருதங்கேணியில் திறந்து வைப்பு!

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள "சிறான்" நிறைவேற்றுப் பணிமனை கடந்த புதன்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைபவம் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் ஈகச்சுடர்களை அவுஸ்திரேலியாவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளரும், அமெரிக்காவில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளரும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்குக் கடற்புலிகள் அரசியற்துறையைச் சேர்ந்த யாழ்மன்னன் ஏற்றினார். பணிமனையின் பெயர்ப்பலகையைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் திலகர் திரைநீக்கம் செய்துவைத்தார். (17)

# கல்வி, பொருளாதார அபிவிருத்தி குறித்து நாம் அக்கறையுடன் செயற்படவேண்டும்!

## முன்பள்ளி வேலைப்பட்டறையில் கிறிஸ்ரி லோறன்ஸ்

(யாழ்ப்பாணம்)

'சமாதானத் தீர்வினை நோக்கி நகரும் இக்கால கட்டத்தில்- எமது கல்வி, பொருளாதாரம் என்பவற்றை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும்' எனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பணிப்பாளர் கிறிஸ்ரி லோறன்ஸ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் நேற்று முன்தினம் நடத்திய முன்பள்ளிக் கல்வி செயற்திட்ட வேலைப்பட்டறையில் தலைமையுரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் ஆகியவற்றில் அக்கறை எடுத்து, பல்வேறு செயற்பாடுகளைப் போரினால் பாதிக்கப்பட்ட வட - கிழக்குப் பகுதியில் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக வட - கிழக்குப் பகுதியிலுள்ள சிறுவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு சகல நிறுவனங்களையும், திணைக்களங்களையும் இணைத்து முன்பள்ளிக் கல்விச் செயற்திட்டமொன்றைச் செயற்படுத்தவுள்ளது.

இதில் சுகாதாரத்திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கல்வித்திணைக்களம் மற்றும் சர்வதேச நிறுவனங்கள், அமைப்புக்கள் எல்லாவற்றையும் இணைத்து வேலைத்திட்டமொன்றை முன்வைக்கவுள்ளது.

இச்சமாதான காலத்தில் சர்வதேச நிறுவனங்கள் - உள்ளூர் நிறுவனங்களின் திட்டமிடல், முகாமைத்துவம், மூலதனம் ஆகியவற்றுக்கு உதவிசெய்ய வேண்டும்.

வட - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் முன்பள்ளிகள் போதிய வசதிகளுடன் இதுவரை இயங்கவில்லை. கல்வி அமைச்சும் இவற்றைத் தனது செயற்பாடுகளுக்குள் உள்ளடக்கவில்லை. முன்பள்ளிகளுக்குரிய நிதிகளை அரசாங்கம் வழங்குவதில்லை.

எனவே, நாம் எமது கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும். எமது இச்செயற்பாடுகளினால் ஏற்படும் முன்னேற்றங்கள் - பேச்சுவார்த்தையில் ஏற்படும் இறுதித்தீர்வில் பிரதிபலிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய மீன்பிடிப் படகுகளைத் திருடமுயன்றதாக நால்வர் கைது!

மன்னாரில் கடற்படையினரின் பாதுகாப்பிலிருந்த இந்திய மீனவர்களின் படகுகளைத் திருடமுயன்றதாகக் குற்றம் சாட்டி நால்வரைக் கடற்படையினர் கைதுசெய்தனர்.

வங்காலைப்பாடு கடற்படை முகாமில் இந்திய மீனவர்களின் படகுகள் நிறுத்தப்பட்டிருந்தன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் கடற்படை முகாமுக்குள் உட்புகுந்த நான்கு பேரை, படகுகளைத் திருடமுயன்றதாகக் கடற்படையினர் கைது செய்தனர்.

வாணன், ஜோசப், அமல், விமல் ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களை மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கைதானவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி, காணாமற்போன படகுகளைத் தேடியே அப்பகுதிக்கு இவர்கள் சென்றதாகவும், இந்திய மீனவரின் படகுகளைத் திருடும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்றும் தெரிவித்தார்.



# குறைதீர் மன்றம்

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியைப் பெறுவதற்காக நான் பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்திருந்தேன். ஏற்கனவே பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், பிரதியைப் பெறமுடியவில்லை. அலுவலகத்தில் பதிவுகள் இல்லை எனப் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு உரிய அதிகாரிகளிடம் இருந்து தீர்வைப் பெற்றுத்தருவீர்களா?

**தீபன் - உடுவில்**

**நமது ஈழநாடு**

இது குறித்து மேலதிக மாவட்டப் பதிவாளர் கூறும்போது- 'சிலர் பதிவுகளை வைத்தியசாலையில் பதியாமல் தனியாரிடம் வெளியில் பதிகிறார்கள். இதனால், பதிவுகளில் சில பிழைகள் ஏற்படுகின்றன. அத்துடன், சிலர் எமக்கு விண்ணப்பத்தை அனுப்பும்போது பிழையான பெயர்களில் அனுப்புவதால் நாம் அவர்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை அனுப்ப முடியாதுள்ளது.

சிலர் விண்ணப்பத்தை நிரப்பும்போது தெளிவில்லாமல், பூரணமில்லாமல் நிரப்புகிறார்கள். இதுபோன்ற காரணங்களினால்தான் நாம் அவர்களது பதிவுகள் இல்லை எனப் பதில் அனுப்புகிறோம். ஆனாலும், நாம் கூடிய கவனமெடுத்துப் பிறப்பு பதிவுகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறோம். அவர்கள் தமது இலக்கங்களைக் குறிப்பிட்டால் உடனடியாகப் பெறக்கூடியதாக இருக்கும்.

எமது அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை காணப்படுகிறது. இதனாலும் எமது பணிகள் தாமதமடைகின்றன' என்றார் அவர்.

# 20 ஆண்டு கால அனர்த்தங்கள், அழிவுகள்; தன்னாட்சி மூலம் முடிவு கட்டக்கோருவோம்!

## மேதினத்தையொட்டி ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

நிரந்தரமான போர் நிறுத்தம், அதிகாரம் மிக்க தன்னாட்சி, உயர் பாதுகாப்பு வலய நீக்கம், உடன் மீள்குடியேற்றம், ஆகியவற்றை வலியுறுத்தி விடுதலைப்புலிகள் மற்றும் அனைத்துத் தரப்புகளுடனும் இணைந்து நடத்தவுள்ள மேதினத்தில் கலந்துகொள்ளுமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் அழைப்புவிடுத்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

வெள்ளையராட்சியின் பின் ஈழத் தமிழ் தொழிலாளர்களின் மேதினம் வெற்றிகளைக் கொண்டாடும் தினமாக அமையவில்லை. மாறாக தொடர்ச்சியான உரிமைகோரும் போராட்டமாகவே அமைந்தது.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக ஏனைய தொழிலாளர்களைப் போலவே ஈழத்தொழிலாளர்களும்- முதலாளித்துவ முறையின் பின் பல்வேறு வகை சுரண்டல்களுக்கு உள்ளாகி வருவது மட்டுமல்லாது, தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிங்கள இனவாத ஆட்சிகளின் கீழ் தமிழ் பேசும் தொழிலாளர் என்பதால் தொழிலாளர் வர்க்கத்துக்குள்ளும் இரண்டாந்தர தொழில்ள்ளர்களாக, அடிப்படை உரிமைகளும் மறுக்கப் பட்ட தொழிலாளர்களாகவும் இரட்டை ஒடுக்குமுறையின் கீழ் வாழ்ந்து வந்தனர். எனவே, ஈழத்தொழிலாளர்கள் போராட்டம் என்பது தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்ததாகும். சிங்கள மேலாதிக்க ஆட்சி முறைக்கெதிராக வீறுகொண்டெழுந்த இன விடுதலைப் போரை மழுங்கடிக்கச் சிங்கள இனவாத அரசுகள் கைக் கொண்ட உத்திகளில் ஒன்று ஈழத்தின் பொருளாதார அடித்தளங்களையே தகர்ப்பது என்பதாகும்.

இவ்வகையில் ஈழத்தின் கலாசாரத் தலைநகராம் யாழ்ப்பாணத்தின் இரு கண்களாகக் கருதப்படும் விவசாயத்தையும், கல்வியையும் முடக்குவதில் அரசு முனைப்புடன் செயற்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் யாழ். மாவட்டத்திலும், ஈழத்தின் ஏனைய சில மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் செழிப்புமிக்க நிலங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இதன்மூலம் பல முக்கிய பாடசாலைகளும், வணக்கஸ்தலங்களும் - மாணவர்களினதும், மக்களினதும் பயன்பாட்டுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான மீன்பிடித் தொழிலாளர்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமது வாழ்விடங்களில் இருந்தும், மீன்பிடித் தொழிலில் இருந்தும் முற்றாக விரட்டியடிக்கப்பட்டு பட்டினிக்குள் தள்ளப்பட்டனர். இலங்கையின் இராணுவ, பொலிஸ் உளவுத்துறை உட்பட்ட நாட்டின் பல முக்கிய துறைகள் ஏற்கனவே தனிச் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளமை உலகம் அறிந்த விடயம்.

ஆனால், போரிற்குள்ளும், போர்ச் சூழலுக்குள்ளும் - மக்களையும், உலகையும் திசைதிருப்பிவிட்டு உரிமைக்கான ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டங்களிலேயே, இலங்கையின் நிர்வாக சேவையையும் கிட்டத்தட்ட தனிச் சிங்கள மயமாகவே தொடர்ந்து வந்த அரசுகள் மாற்றிவிட்டன.

27 வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட இந்நாட்டின் நிர்வாக சேவையில், இன்று 96 வீதம் சிங்களவர் உள்ளனர். இன்று போர் நிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் பல லட்சம் தொழிலாளர்கள், விவசாயிகள் குடும்பங்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாமை, சொந்த நிலங்களில் பயிர் செய்யமுடியாமை, மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடிக்க மறுக்கப்பட்டுள்ளமை, தமது தொழில்களை தமது தொழிற்சாலைகளில் இழந்து நிற்கும் நிலைமைகள் நீடிக்கின்றன.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான எம் மக்களின் சொந்த நிலங்களில் வாழும் உரிமைகள், சொந்த நிலத்தில் பயிர் செய்யும் உரிமைகள், வழிபாட்டு உரிமைகள், கல்வி கற்கும் உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு வருகின்றன.

இவை சமாதான சூழ்நிலைகளிலும் எம்மவர்களுக்கு மறுக்கப்படுவதைக் கொழும்பின் ஆட்சியாளரின் செவிகளுக்கு உறைக்கும் வண்ணம் இடம்பெயர்ந்த அனைத்து தமிழ் மக்களையும் அவர்களின் நிலத்தில் குடியேற்ற அரசு உடனடியாகச் செயற்பட்டாகவேண்டும் என்பதை அகில உலகத்திற்கும் எடுத்துக் காட்டவரும் மேதினத்தில் அலைகடலாய் அணிதிரள்வோம்.

தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள் என்ற வேறுபாடுகளைக் கடந்து ஆண், பெண் என்ற பேதமின்றி அனைவரும் அணிதிரள, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மக்களை அறைகூவி அழைக்கின்றது.

கட்சி பேதமின்றி நாம் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகள், அனைத்துத் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முன்னெடுக்கும் இம் மாபெரும் மேதின ஊர்வலத்தில் நிரந்தரப் போர்நிறுத்தம் கோரி, அதிகாரம் மிக்க தன்னாட்சி கோரி, உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கக் கோரி, மீள்குடியேற்றத்தை உடன் நடத்திடக்கோரி அனைத்துத் தமிழ் மக்களும் அணிதிரளுமாறு அழைக்கின்றோம்.

எமது பிரச்சினைகளுக்காக குரல் எழுப்ப வேண்டியது நாம் தான். நாம் ஒவ்வொருவரும் தான் அலைகடலாய் அணிதிரண்டு முழக்கமிடும் இக்கோரிக்கைகள் கொழும்பு அரசை மட்டுமல்ல, உலகின் செவிகளையும் அதிரவைக்கட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களுவாஞ்சிக்குடிப் பகுதியில் வைரஸ் காய்ச்சல் தீவிரம்

களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள துறை நீலாவணைக் கிராமத்தில் வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவியுள்ளதாகவும், இதுவரை நூற்றுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்காய்ச்சல் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டிருக்கலாமெனக் கூறப்படுகின்றது. தற்போது நாட்டில் வெயிலின் வெப்பம் அதிகரித்துள்ளதால், பல பாகங்களிலும் வறட்சி ஏற்பட்டுள்ளது. வெப்பத்தின் அதிகரிப்பாலும், இரவில் பனிப்படலத்தின் அதிகரிப்பாலும் மனித உடலில் திடீர் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் தொண்டை நோ, சளிரோகம், இருமல் போன்ற அறிகுறிகளுடன் காய்ச்சல் ஏற்படுகிறது. இது ஒரு வைரஸ் நோயாகவிருக்கலாம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கல்லாறு மாவட்ட வைத்தியசாலை, கல்முனை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் தாக்குதல் பற்றிய விபரணத் திரைப்பட வெளியீடு

கடந்த வருடம் டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று நெல்லியடி பொதுமக்கள் மீது பொலிஸார் நடத்திய கொடூரத் தாக்குதல் சம்பவம் பற்றிய "யாருக்கு யார் காவல்" என்ற விபரணத் திரைப்படம் ஒன்று சலன சித்திரம் அமைப்பினரால் தயாரிக்கபட்டுள்ளது.

இத்திரைப்படம் தொடர்பாக ஊடகவியலாளருக்கான அறிமுகக் காட்சி கடந்த செவ்வாயன்று சங்கச் செயலகத்தில் காண்பிக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் இலவசமாக தொழிற்திறன் பயிற்சிகள்

(கொக்குவில் மேற்கு)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள இலவச தொழிற்திறன் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தட்டச்சுப் பயிற்சி, துவிச்சக்கர வண்டி திருத்துதல், நீரிறைக்கும் இயந்திரம் திருத்துதல், பனம் பொருள் உற்பத்தி, சிகையலங்காரமும்ஒப்பனையும் ஆகிய 6 மாதகாலப் பயிற்சிநெறியும், கனரக வாகனமோட்டும் 8 மாதகாலப் பயிற்சியும் நடத்தப்படவுள்ளன.

மேற்படி பயிற்சிநெறிகளுக்கு 17 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். தட்டச்சுப் பயிற்சிநெறிக்கு க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர்- கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு முறைசாராக் கல்விப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (108)

# ஜெயா மாஸ்ரருக்கு நீதிமன்றம் பிணை!

(நெல்லியடி)

பருத்தித்துறை நீதிமன்றத்தினால் புளொட் அமைப்பின் உறுப்பினர் ஜெயா மாஸ்ரர் கடந்த செவ்வாயன்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நெல்லியடிப் பகுதியில் இளைஞன் ஒருவரின் கழுத்தினை வெட்டிக் கொலை செய்த வழக்கில் கைதுசெய்யப்பட்டு பிணையில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும், நீதிமன்றத்துக்கு இவர் ஒழுங்காகச் சமூகமளிக்காத காரணத்தினாலும், யாழ். நீதிமன்றத்தினால் பல கட்டளைகள் அனுப்பப்பட்டபோதும் இவர் அதனை நிராகரித்ததன் காரணமாகவும் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

தற்போது இவர் நீதிமன்றத்துக்கு ஒழுங்காகச் சமூகமளிப்பதன் காரணமாக மீண்டும் பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. (13)

# கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் விளையாட்டு நிகழ்வில் ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ளன.

இருபத்திநான்கு அணிகள் பங்குபற்றும் இப்போட்டித் தொடரில் இறுதியாட்டம் ஐந்து சுற்றுக்களையும், ஏனையவை 3 சுற்றுக்களையும் கொண்டமைவதோடு சர்வதேச கரப்பந்தாட்ட விதிகளுக்கு அமைவாகவே போட்டிகள் யாவும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# அரசாங்கத்தைக் கவிழ்க்க காலியில் ஆலோசனைக் கூட்டம்

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

ஆட்சிக் கவிழ்ப்புத் தொடர்பாக ஆராய இரு கட்சிகளின் உயர்மட்டத்தலைமைகளும் காலியில் இரகசியச் சந்திப்பு ஒன்றை நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும், ஜே.வி.பியின் சார்பில் விமல் வீரவன்சவும் இந்தச் சந்திப்புக்குத் தலைமை வகித்தாகத் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி சந்திகாவின் பிரதிநிதியாக அவரது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்துகொண்டதாகத் தெரியவருகின்றது.

# தலைவர் பிரபாவின் பின்னால் தமிழினம் அணிதிரண்டிருப்பதை வெளிப்படுத்துவோம்!

## தமிழ் காங்கிரஸ் மேதின அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அவர்கள் ஏற்கின்ற தீர்வை மட்டுமே தமிழீழ மக்கள் ஏற்பார்கள்.

அதன் பொருட்டு முழு இனமும் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அணிதிரண்டு நிற்கின்றது என்பதை இந்த மேதினம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், அவரது அரசாங்கத்துக்கும் மட்டுமன்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் இடித்துரைப்பதாக அமையவேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எதிர்வரும் மேதினம் தமிழீழ மக்களின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது.

சென்ற மேதினம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் சிறிது காலத்தில் நடந்த ஒன்றாகும்.

சமாதானம், இயல்பு வாழ்க்கை மீள்வு, மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரைமைப்பு, மீன்பிடி, விவசாய தொழில்கள் மீதான தடைகள் நீக்கம் எனப் பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்றது.

ஆனால், எதிர்வரும் மேதினமோ ஆறு சுற்றுப் பேச்சுகளுக்குப் பின்பும் அவற்றின் முடிவுகள் சிறிலங்கா அரசினால் அமுல் செய்யப்படாமையாலும், இயல்பு வாழ்க்கை திரும்பாமலும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர முடியாமை புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் எதிர்பார்த்தபடி முன்னெடுக்காமை போன்ற பல்வேறு காரணங்களால் ஏழாவது சுற்றுப் பேச்சுக்கள் விடுதலைப் புலிகளின் தலைமையினால் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நிகழ்கிறது.

எமது இனம் தமிழீழ தாயகமும் அதன் தன்னாட்சிக்கான சுயநிர்ணய உரிமை மற்றும் எமது தேசிய இனம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்து விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் முன்னெடுத்தவர்கள் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கமே.

அவர்களே தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகளும், ஏகபலமும் ஆவார்கள்.

இந்தப் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் சகல தமிழ்பேசும் மக்களும் கலந்துகொண்டு எமது ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேண்டுகிறது.

# மாணவரிடையே செஞ்சிலுவைச்சங்க போட்டிப்பரீட்சை

(கொக்குவில் மேற்கு)

உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளிநொச்சி மாவட்டக் கிளையினால், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தவுள்ள - செஞ்சிலுவைச் சங்கம் பற்றிய போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(108)



நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் க.பொ.சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு ஆசிரியர் ஒருவர் மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# மக்கள் பிரச்சினைக்கு தீர்வைக் கோரியே பேச்சுக்களிலிருந்து விலகியுள்ளோம்!

## இந்துமத குருமார்களுடனான சந்திப்பின்போது வே.பாலகுமாரன் தெரிவிப்பு

"எம் பழைய அரசியல் தலைவர்களைக் கையாண்டதுபோல், விடுதலைப் புலிகளையும் கையாளலாம் என எவரும் எண்ணக்கூடாது. புலிகளை ஒரு மாதிரி மழுப்பி எடுத்து பலவீனப்படுத்தலாம் என எண்ண வேண்டாம். இதனாலேயே எம் மக்களின் உடனடிப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க அழுத்தம் கொடுப்பதற்காக பேச்சுக்களிலிருந்து விலகும் தீர்மானத்தை எடுத்துள்ளோம்".

- இவ்வாறு புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன், இந்து குருமார் ஒன்றியத்தில் இந்துமத குருமாருடனான சந்திப்பில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் - அரசியறதுறை துணைப் பொறுப்பாளர் தங்கன், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் பாலகுமாரன் தொடர்ந்து உரையாற்றுகையில் - நாம் இப்போது எடுத்துள்ள தீர்மானம் மட்டுமன்றி இன்னும் பல தீர்மானங்களை எடுக்கவேண்டியநிலையில் உள்ளோம். இதன் பொருள், போரைத் தொடங்கப் போகிறோம் என்பதல்ல. எமது பலத்தை நாம் என்றுமே கைவிட்டுவிடமுடியாது.

1956 ஆம் ஆண்டு பாணந்துறை, கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற சம்பவம் எனக்கு இன்றைக்கும் ஞாபகம் இருக்கிறது. தலைவர் மனதிலும் இருக்கிறது. அந்த அர்ச்சகரை சிங்களவர் நடு உச்சிவெயிலில் நிறுத்தியதுடன், அவரது பெண்பிள்ளைகளையும் சித்திரவதை செய்தனர். கொதிக்கும் தாரை ஊற்றித் தசைப்பிண்டங்கள் நெருப்பாக ஓட, சிங்களவன் பார்த்துச் சிரித்த வரலாறு 56 ஆம் ஆண்டு வரலாறு. இங்குதான் எமது போராட்டத்தினுடைய வித்து ஊன்றப்பட்டது. அன்றைக்கு அவர் பட்ட துன்பம் இன்றைக்கும் நீங்கவில்லை. அந்த அர்ச்சகர் சிந்திய கண்ணீர், அவருடைய பெண்கள்பட்ட அவமானத்தைச் சிங்களவர் பார்த்துச் சிரித்தனர். அன்று அவர்கள் சிந்திய கண்ணீர்தான் இன்றைய பிரபாகரன்.

எமது இனம் வெற்றிபெற்று சுதந்திரமாக வாழக்கூடிய நிலை வந்த பின்னர்தான், ஏன் சண்டை போடுகின்றாய்? ஏன் யுத்தம் புரிகின்றாய்? உனது போரை நிறுத்து. உனது பிரச்சினை என்ன? என்று கேட்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. போர் செய்வதற்கு முன்னர் உலகம் இந்த வாய்ப்பை எங்களுக்கு நல்கியிருந்தால், எமது மண்ணினுடைய நிலைமை இன்று வேறாக இருந்திருக்கும். ஒரு இனத்தினுடைய அழுகையைப் பார்த்துக் கொண்டிருந்த உலகம், எங்களுக்காகக் கண்ணீர் சிந்த எவரும் வராத காலகட்டத்தில் வராத அவர்கள் - இன்று அமைதி என்று கூறியவாறு வந்து நிற்கின்றனர்.

இன்றைக்கு தமிழ் மக்கள் முதன் முறையாக தலைநிமிர்ந்து, தங்களுடைய விருப்பம் இதுதான்: இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கின்றார்கள்.

நாங்கள் இன்று தலை நிமிர்ந்து சிங்கள அரசுக்கு, அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எங்களை வாழவிடு என்று சொல்கின்றோம்.

நாங்கள் போர்ப் பிரியர்களல்ல. போர்புரிய எங்களுக்கு விருப்பமுமல்ல. நாங்கள் பயங்கரவாதிகள் கிடையாது.

இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, 40 ஆயிரம் இராணுவத்தினர் வாழ்கின்றார்கள். எமது பெண்கள் மீது சில அடாவடித்தனங்களை அவர்கள் மேற்கொள்கின்றனர். இது அனைத்தையும் நாம் நெடுங்காலம் பொறுத்துக்கொண்டு பார்த்திருக்க முடியாது.

உண்மையிலே வரி இல்லாமல் இயங்கும் அரசு உலகத்தில் கிடையாது. நாங்கள் எம்மை நியாயப் படுத்தவில்லை. ஆனால், எங்களுக்கு வரி தேவை. போராடுகின்ற போராளிகளையும், போராடி விழுப்புண் அடைந்த போராளிகளைக் காக்கவும் பணம் தேவையென்பதை நாங்கள் கூறித் தெரியவேண்டியதில்லை. நாங்கள் வரியை இல்லாமல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். எவ்வாறு என்று சொன்னால், இந்தப் பேச்சுவார்த்தைக்கூடாக சரியான தீர்வை அரசு முன்வைத்து வட-கிழக்கினுடைய நிர்வாகத்தைத் தருமாயிருந்தால் நாங்கள் முறையான ஒரு திட்ட வரிமுறை ஊடாக எங்களுடைய பணத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். அப்போது எமது இப்போதைய வரிமுறை இல்லாது



போகும்.

இது எல்லாவற்றுக்கும் மேலாக நாம் போரை வராது செய்ய வேண்டுமானால், மதகுருமார்கள் அரசியல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் எமது மக்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

நாங்களாகப் போர் தொடுக்கமாட்டோம். எங்கள் மீது போர் தொடுக்கப்பட்டால் நாங்கள் போர் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவோம். அதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

# இரவுவேளை வீடுபுகுந்த சிப்பாய் வீட்டு உரிமையாளரால் தாக்கப்பட்டார்!

## சம்பவம் குறித்து படையதிகாரி மக்களிடம் மன்னிப்புக் கோரினார்

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள வீடொன்றில், நேற்று முன்தினம் இரவுநேரம் புகுந்து பெண்களுடன் சேட்டைபுரிய முற்பட்ட இராணுவச் சிப்பாய்க்கும் வீட்டு உரிமையாளருக்கும் ஏற்பட்ட மோதலில், இராணுவச் சிப்பாய் தலையில் பலத்தகாயத்துடன் வீட்டு உரிமையாளரைத் தாக்கிவிட்டுத் தப்பியோடிவிட்டார்.

மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட சிப்பாயினுடைய சீருடை, டயறி மற்றும் அவரது பதவிக்கான சின்னம் போன்றவற்றை சம்பவ இடத்திலிருந்து வீட்டு உரிமையாளர் மீட்டார்.

இச்சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து இரவு 1.30 மணியளவில், கொழும்புத்துறைப் பகுதிக்கான இராணுவப் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்தார். அப்போது பொறுப்பதிகாரி, அவர் இராணுவச் சிப்பாய்தானா என்பதை அடையாளம் காட்ட உங்களிடம் என்ன இருக்கிறது எனக் கேட்டார்.

இதனையடுத்து, அச்சிப்பாயினால் விட்டுச்செல்லப்பட்ட பொருட்கள் யாவும் ஒப்படைக்கப்பட்டன. தினக்குறிப்பிலிருந்த பெயரின் அடிப்படையில், அவர் தமது இராணுவச் சிப்பாய்தான் என்பதை ஒத்துக் கொண்ட பொறுப்பதிகாரி, காலையில் இதற்கான பதிலைத் தருவதாகக் கூறினார்.

காலையில் இராணுவ முகாமுக்குச் சென்றவர்களிடம் இராணுவ அதிகாரி, இக்குற்றச் செயலைச் செய்த இராணுவச் சிப்பாய் மயக்கமடைந்த நிலையில் எமது படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது பலாலி இராணுவ முகாமில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரிடமிருந்து வாக்குமூலம் பெறுவது மிகவும் கடினமாக இருப்பதாகக் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக 512 ஆவது பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு வருகைதந்த கேணல் உடுவத்த, இடங்களைப் பார்வையிட்டதோடு, சம்பவம் தொடர்பான விபரங்களைக் கேட்டறிந்தார். அத்தோடு இச்செயலில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய் இராணுவச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படுவார் என்றும், இதற்காகத் தான் மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்தார்.

(சு)

# வெள்ளை வானில் வந்தோர் முஸ்லிம்களை கடத்த முயற்சி!

## விழிப்புடனிருக்க புலிகள் வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காங்கேயன் ஓடையில் உள்ள முஸ்லிம்கள் வாழும் இடத்தில், நேற்று முன்தினம் இரவு வெள்ளை வானில் சென்ற இனந்தெரியாதோர், முஸ்லிம்கள் இருவரைக் கடத்த முயற்சித்ததையறிந்த மக்கள் கூச்சலிடவே, வாகனத்தில் வந்தவர்கள் தப்பிச் சென்றனர்.

இதனையடுத்து முஸ்லிம் மக்கள்-விடுதலைப் புலிகளின் பணிமனைக்குச் சென்று முறைப்பாடு செய்தனர்.

இவ்வாறான செயல்கள், சமாதானத்தை விரும்பாத சக்திகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும் என்றும், முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் மட்டு.-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

# வெளிநாடுகளும் உதவுமாறு எதியோப்பியா கோருகிறது






எதியோப்பியாவில் பட்டினி நிலைமை மேலும் மோசமடைவதைத் தொடர்ந்து, அந்நாட்டரசு வெளிநாட்டு உதவியைக் கோரியுள்ளது. ஏற்கனவே பட்டினி நிலையைச் சமாளிக்கவென மாபெரும் இசை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து, அதன்மூலம் 'உள்ளூரில் நிதி சேகரிக்க எதியோப்பியாவுக்கு உதவுக' என்ற தொனியிலான உதவிகோரும் பாடல் ஒன்றும் இந்த இசை நிகழ்வுக்காகத் தயாராகிவருகிறது.

எதியோப்பியாவிடம் இந்த ஆண்டு இறுதிவரைக்கும் 250 ஆயிரம் தொன் உணவே கையிருப்பில் உள்ளது. கடந்த ஜனவரி மாத அறுவடை, வறட்சியால் பாதிக்கப்பட்டதே தற்போதைய பட்டினி நிலைக்குக் காரணம் எனக்கூறப்படுகிறது.

# ஈராக்கில் அடுத்த வாரம் சிவில் நிர்வாகம் அமையும்

## அமெரிக்க நிர்வாகி கார்னர் அறிவிப்பு



ஈராக்கில் கார்னர்

ஈராக்கிய அரசின் அமைச்சுக்கள அடுத்தவார இறுதியில் மீளத் திறக்கப்படும் என, தற்போது ஈராக்கின் நிர்வாகியான அமெரிக்காவின் ஓய்வு பெற்ற ஜெனரல் ஜேய் கார்னர் தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும் எனவும், பணிக்குத் திரும்புபவர்களுக்கு ஒரு வாரத்தில் விசேட அவசரகால ஊதியமும், பின்னர் ஒரு மாத முடிவில் மாத ஊதியமும் வழங்கப்படும் எனவும் கார்னர் அறிவித்துள்ளார்.

சிவில் நிர்வாகத்தைக் கவனிக்கவென 60 ஈராக்கிய சிவில் அதிகாரிகளை அமெரிக்க அதிகாரிகள் தெரிவுசெய்துள்ளனர்.

இதேவேளை - தற்போது ஈராக்கின் சொந்தப் பாவனைக்கென 70 ஆயிரம் பீப்பாய் எண்ணெய், தென் ஈராக்கில் உள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து பெறப்பட்டு வருகின்றது.

இதனிடையே, அமெரிக்கப் படைகளால் தேடப்பட்ட மேலும் இருவர் கைதாகியுள்ளனர். முன்னாள் இராணுவப் புலனாய்வாளர் ஜெனரல் சதார் அல் நஹிப் மற்றும் முன்னாள் விமானப்படை அதிகாரி ஹசன் அல் திக்ரிதி ஆகியோரே கைதானவர்களாவர்.

உலகவலம்

இதேவேளை - ஈராக்கில் உள்ள பிரிட்டிஷ் படைகளின் மூன்று பிரிகேட்டுகள் விரைவில் ஒன்றாகக் குறைக்கப்படவுள்ளன.

# 'சார்ஸ்' நோய் பரவுவதால் சீனக் கிராமங்கள் முற்றுகையில்

சீனாவில் 'சார்ஸ்' நோய் வேகமாகப் பரவுவதை அடுத்து, பாதிக்கப்பட்ட கிராமங்களை, ஏனைய பகுதிகளிலிருந்து முற்றாகத் துண்டித்து வைக்கும் நடவடிக்கைகளை சீன அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். பீகிங்கில் உள்ள வைத்தியசாலையும் பூரணமான முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் தற்போது நூற்றுக்கணக்கான 'சார்ஸ்' நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர். உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவசரக் கோரிக்கையை அடுத்தே சீனா இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.



சீனா கூறுவதைவிட நிலைமை மேலும் மோசமாகவே இருப்பதாக, உலக சுகாதார ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
(சி.783)
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

# ரத்வத்தவிற்கு விசேட பாதுகாப்பா?

# ஜனாதிபதி விடுத்த பணிப்புரை சட்டவிரோதம் என குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேச்சுக்களிலிருந்து விலகுவதாகப் புலிகள் அறிவித்ததைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் ரத்வத்தவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டமையானது, சட்டவிரோதமான செயலென உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றவாளியான ரத்வத்தவுக்குப் பாதுகாப்பை பலப்படுத்துமாறு ஜனாதிபதி கோரியமை சட்டவிரோதமானது. ஜனாதிபதியின் கோரிக்கையானது, ரத்வத்தவின் பாதுகாப்புக்கு இப்போது பொறுப்பாக இருக்கும் சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளது. குற்றவாளிக்குப் பாதுகாப்புக் கேட்பது ஜனாதிபதியின் செயலல்ல என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

## புதியதூதுவர் இலங்கை வந்தார்

(கொழும்பு)

நோர்வேயின் புதிய தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

முன்பு இலங்கைக்கான நோர்வேத் தூதுவராக பதவி வகித்த ஜோன் வெஸ்பேர்க்கிற்குப் பதிலாக இவர் இப்பதவியைப் பொறுப்பேற்பது குறிப்பிடத்தக்கது.

இவருடன் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும் வந்துள்ளார். நேற்று அதிகாலை இவர்கள் கொழும்பு வந்தடைந்தனர்.

## சம்பூர் கடலில் 7 பேர் கைது

(திருகோணமலை)

திருகோணமலை - சம்பூர்க் கடலில் படகில் பயணம் செய்து கொண்டிருந்த ஏழு தமிழர்கள், கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் - 5 ஆண்கள், பெண் ஒருவருடன், சிறுபிள்ளை ஒன்றும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள், மேலதிக விசாரணைகளுக்கென திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மோட்டார் சைக்கிள் விஷமிகளால் பறிப்பு

(மட்டக்களப்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரின் மோட்டார் சைக்கிளை ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இளைஞர்கள் இருவர் பறித்துச் சென்றுள்ளனர்.

அக்கரைப்பற்று - அம்பாறை வீதியில் நேற்று முன்தினம் இரவு விரிவுரையாளர் தனது நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் - முஸ்லிம் இன உறவை சீர்குலைக்க முயலும் சிலதீய சக்திகளே மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காட்சிப் புடைவைகளை அகற்றிய மாநகர ஊழியர்களுடன் கைகலப்பு

நேற்றுக்காலை யாழ். நவீன சந்தைக் கடைகளின் முன்னால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த துணிகள், உடுப்புகளை அகற்றிய மாநகரசபை ஊழியர்களிற்கும் கடை ஊழியர்களிற்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து, மாநகரசபை ஊழியர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

கடை உரிமையாளர்கள் அனைவரும் மாநகரசபைக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்து கடைகளைப் பூட்டியிருந்தனர்.

இதனால், நேற்று நவீனசந்தை வெறிச்சோடிக் காணப்பட்டது.

## பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு பிரான்ஸ் தூதரகம் கோரிக்கை

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் தம் வேறுபாடுகளைக் களைந்து மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் கோரியுள்ளது.

பேச்சிலிருந்து விலகுவதான புலிகளின் அறிவித்தல் குறித்து, தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

## சமாதானத்தைக் குழப்பும் திவயின, இக்பால் அத்தாஸ்

### பிரதமர் ரணில் குற்றச்சாட்டு

சமாதான முயற்சிகளை சில செய்தி நிறுவனங்களும், செய்தியாளர்களும் குழப்பியடிப்பதாக பிரதமர் குற்றஞ்சாட்டியுள்ளார். நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற, அமைச்சுக்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

சமாதானப் பேச்சு குறித்த தவறான தகவல்களை அண்மையில் வெளியிட்டது தொடர்பாக, தாம்- 'திவயின' பத்திரிகையை வெளியிடும் உபாலி நிறுவனத்தின் நிர்வாகியைத் தொடர்புகொண்டு கேட்டபோது, போர்ச் செய்திகளை வெளியிடும் இக்பால் அத்தாஸ் என்ற செய்தியாளரே இத்தகவல்களை வழங்கியது தெரியவந்தது எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

### அதிரடிப்படை முகாமிலிருந்து ஷெல் வீச்சு

நேற்றுமுன்தினம் நள்ளிரவு அம்பாறை மாவட்டம், தம்பிட்டி அதிரடிப் படை முகாமிலிருந்து ஏவிய எறிகணைகளால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் பதற்றத்திற்குள்ளாகினர்.படையினர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகப் பின்னரே தெரிவிக்கப்பட்டது.



நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன சகிதம் அமைச்சர் ரவூப் ஹக்கீமோடு பேச்சுவார்த்தை நடத்துவதை படத்தில் காணலாம்.

## புலிகளின் அரசியல் குழு ஐரோப்பா புறப்பட்டது!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு, ஐரோப்பாவின் சமஷ்டி நாடுகளுக்கான விஜயத்தை நேற்று ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவின் 16 உறுப்பினர்கள், நேற்றுக்காலை கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டனர்.

இக்குழு- இன்று விமானம் மூலம ஜேர்மனி செல்லும். தொடர்ந்து 20 நாட்கள், சுவிஸர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கும் சென்று, அந்நாடுகளின் சமஷ்டி அமைப்புக்கள் பற்றி இக்குழுவினர் ஆராயவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### காலிக்கு இந்திய கடற்படைக் கப்பல்

இந்திய கடற்படைக் கப்பல் ஒன்று, நாளை சனிக்கிழமை காலி துறைமுகத்துக்கு வரவுள்ளது. 84 கடற்படையினரைக் கொண்ட இக்கப்பல் ஞாயிற்றுக்கிழமை மீளத் திரும்பும். இக்கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு கடற்படைக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## பேச்சுக்கள் மீண்டும்...

என்பதில் ஆர்வமாக இருக்கிறோம்.

பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றங்களைப் பொறுத்து அமெரிக்கா மேலும் உதவிகளைச் செய்யும்.

பேச்சுக்களில் இருந்து விலகியது ஏன் என்பதற்காக விடுதலைப் புலிகள் தெரிவித்த காரணங்களை அமெரிக்கா கவனமாக ஆராய்ந்துள்ளது. அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. அமைதியான அரசியல் தீர்வை உண்மையாகவே நாடும் ஒரு தரப்பு, தமது பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளமுடியும்.

பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டாலும் போர் நிறுத்த உடன்படிக்கையை இருசாராரும் மதிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகள் செயலளவிலும் வன்முறைகளைக் கைவிட வேண்டும்.

வடக்கு - கிழக்கைக் கட்டியெழுப்பும் பணிகளுக்கு அதிக காலம் எடுப்பதை ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால், துரித நடவடிக்கைகள் குறித்த எதிர்பார்ப்புகள் மிகவும் அதிகம் என அமெரிக்கத் தூதுவர் மேலும் சொன்னார்.

தமது பொருளாதாரக் கொள்கைகளை வெளியிடுமாறும் அமெரிக்கத் தூதுவர் விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளார்.

## ஏ-9 வீதியை...

தத்தின் நிபந்தனை என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

எனவே, ஏ-9 வீதியை மூடிவிடுவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் ஒரு செயல் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

ஏ-9 பாதையை மீண்டும் மூடுவதற்கு எந்த ஒரு பாதுகாப்புக் காரணங்களும் ஏற்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

முன்னதாக, கொழும்பு - யாழ்ப்பாணம் ஏ-9 வீதியை மீண்டும் மூடுவது பற்றிப் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது என்று 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து இடைவிலகுவதால், அதனால் எழும் சாதக பாதகங்கள் பற்றிப் பாதுகாப்புச்சபையில் கலந்துரையாடப்பட்டதாகவும்,

ஏ-9 பாதை மூலம் விடுதலைப் புலிகளின் கரும்புலிகள், குண்டுகள் சகிதம் கொழும்புக்குள் நுழையலாம் என்றும் அங்கு சமூகமளித்திருந்த பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கை செய்ததாகவும் 'லங்காதீப' குறிப்பிட்டிருந்தது.

கொழும்பு மாநகரின் பாதுகாப்புச் சம்பந்தமாகக் கலந்துரையாடிய போதே, ஏ-9 பாதையை மூடிவிடுவதற்கும் ஆலோசிக்கப்பட்டதாக 'லங்காதீப' பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

## புலிகள்...

விடுதலைப் புலிகளுக்கே இருக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

வெளிநாட்டு உதவிகள் வெறுமனே அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டால், அந்த உதவிகளை வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் கையேந்த வேண்டியநிலை எழலாம். இந்த உதவிகள் கிடைப்பதற்கு- தமிழீழ விடுதலைப் புலிகள் மிகுந்த விட்டுக்கொடுப்போடு, போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுத்தமையே காரணமாகும் என்றார்.

## பாதுகாப்பை...

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கு அவர் பதிலளித்துப் பேசுகையில் -

விடுதலைப் புலிகள் பேச்சுக்களிலிருந்து விலகியிருப்பதன் மூலம் அது பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

ஏனைய நாடுகளிலும் மிகவும் மோசமான நெருக்கடிகளை சமாதானப் பேச்சுவார்த்தைகள் சந்தித்திருக்கின்றன. ஆனால், அவை உரிய உத்வேகத்தோடு மீள ஆரம்பிக்கப்பட்டதை அமைச்சர் பீரிஸ் மேலும் சுட்டிக்காட்டினார்.

## அடிப்படை விடயங்களில்...

தவறியமை இயல்புநிலை ஏற்படுத்துவதில் தாமதம் காட்டியமை- வொஷிங்ரன் கூட்டத்துக்கு அழைக்காமல் விட்டமை போன்ற பல காரணங்களைக்காட்டி சமாதானப்பேச்சுக்களை புலிகள் இடைநிறுத்தியுள்ளனர். இச்செய்தி சமாதானத்தை விரும்பிய தமிழ் மக்கள் அனைவரது மனங்களில் குழப்பத்தையும், வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பேச்சுவார்த்தை ஓர் இருவழிச் செயற்பாடு. இரு தரப்பினரும் மனம் திறந்து இதய சுத்தியோடு, தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு பேச்சுக்களை நடாத்த வேண்டும். பேசுபவற்றை இரு தரப்பினரும் உடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும். செயற்பாடின்றி தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பதனால் எந்தப் பயனும் இல்லை.

இந்நிலையில் யுத்தம் இனிமேல் என்றுமே வேண்டாம். பேசுவதை செயற்படுத்துங்கள். பேச்சுவார்த்தையைத் தொடருங்கள் என்ற வேண்டுகோளை அரசுக்கும் புலிகளுக்கும் இவ்வேளையில், அவசரமாக தமிழ் மக்கள் அனைவர் பேராலும் விடுக்க விரும்புகின்றோம் என ஆயரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - நோர்வே தூதரக பிரதிநிதிகள் சிலர் நேற்று யாழ். ஆயரைச் சந்தித்தனர். அமைதிக்கான பேச்சுவார்த்தை பற்றியும் அதில் குழப்பம் ஏற்படின் மக்கள் படப்போகும் துன்பம் பற்றியும் இருதரப்பினரும் கலந்துரையாடினர். இது குறித்த தமது கவலையையும், இனிமேல் யுத்தம் ஏற்படாதவாறு செயற்படவேண்டிய அவசியம் பற்றியும் இச சந்திப்பில் ஆயர் வலியுறுத்தினார்.

தாம் எழுதியுள்ள அவசர கடிதம் பற்றியும், அதன் கருத்துக்கள் பற்றியும் அவர் நோர்வேக் குழுவினரிடம் தெரியப்படுத்தினார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.71 | 97.79 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.14 | 153.53 |
| 1 யூரோ | 105.60 | 106.80 |
| 1 சுவிஸ் பிராங் | 70.02 | 71.19 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 59.60 | 60.58 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.87 | 25.87 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.